
# நபி(ஸல்) அவர்களின் கட்டளைகளும் நபித் தோழர்களின் கட்டுப்படுதலும்

Part-1



ஹாஜா முஹ்யித்தீன் ஃபிர்தவ்ஸி

Islamkalvi Media Unit

بسم الله الرحمن الرحيم

# நபி (ஸல்) அவர்களின் கட்டளைகளும் நபித் தோழர்களின் கட்டுப்படுதலும்

அகிலத்தின் அருட்கொடை முஹம்மது (ஸல்) அவர்கள் மக்காவில் பிறந்து, தன்னுடைய அக, புற வாழ்க்கையில் பண்பட்டவராக, ஒழுக்கசீலராக விளங்கி, மற்றவர்களால் நம்பிக்கைகுரியவர், வாய்மையாளர் எனப் புகழப்பட்டு, தன் சமுதாயம் தறிகெட்டு படைத்தவனை விட்டுவிட்டு கண்டதையும் வணங்கி, சீரழிவின் விழிம்பில் இருப்பதைக் கண்டு மனம் வெதும்பி, சமுதாய சீர்திருத்தத்திற்காக தனிமையில் பல நாட்களாக ஹிரா குகையில் இறை தியானத்தில் இளங்கி, அதன் பிரதிபலனாக தன்னுடைய நாற்பதாவது வயதில் இறைவனால் நபியாக ஆக்கப்பட்டு, மக்காவில் பதிமூன்று ஆண்டுகள், மதினாவில் பத்தாண்டுகள் ஆக சுமார் 23 ஆண்டு காலம் நபியாக இருந்து உலகில் யாராலும் செய்ய முடியாத,சாதிக்க முடியாத, மாற்றங்களை ஏற்படுத்த முடியாத, பல அளப்பரிய சேவைகள் ஆற்றி, இந்த அகிலத்தாரின் நன்மைகளுக்காகவே வாழ்ந்து, தனக்காக மக்கள் தங்களின் இன்னுயிரையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கும் அளவிற்கு ஒரு மக்கள் சக்தியை உருவாக்கி, உலகம் அழியும் நாள் வரை அவர்களின் மனங்களில் நீங்கா இடம் பிடித்துச் சென்றிருக்கிறார்கள்.

இப்படிப் பட்ட முஹம்மது (ஸல்) அவர்கள் மக்காவில் தனது ஏகத்துவப் பிரச்சாரத்தை துவங்கிய காலத்திலும் சரி மதீனாவில் இஸ்லாமிய அரசாங்கத்தை நிலை நிறுத்த பாடுபட்ட காலத்திலும் சரி நபி (ஸல்) அவர்களுக்கு பக்கபலமாகவும், உறுதுணையாகவும், அரணாகவும் இருந்து தங்களின் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்த உத்தமர்களே ஸஹாபா என்று சொல்லப்படக்கூடிய நபித்தோழர்கள்.

அவர்களைப் பற்றியும் அவர்கள் இந்த மார்க்கத்தை மேலோங்கச் செய்வதற்காக பட்ட தியாகங்கள் பற்றியும் அவர்களின் குணநலன்கள் பற்றியும் இறைவனின் வேதமான அல்குர்ஆனும் அல்குர்ஆனுக்கு விளக்கமாக அமைந்த நபிமொழிகளும் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

இவ்வுலகில் யாரையும் தெள்ளத்தெளிவாக மூஃமின் என்றோ இறையச்சம் உடையவர் என்றோ உளத்தூய்மை உடையவர் என்றோ சொர்க்கவாசி என்றோ கூறமுடியுமா? யாருக்கும் நம்மால் நற்சான்று வழங்கமுடியாது.

ஆனால் நபித்தோழர்களை மூஃமின்கள் என்றும் இறையச்சம் உடையவர்கள் என்றும் உளத்தூய்மை உடையவர்கள் என்றும் சொர்க்கவாசி என்றும் தெள்ளத்தெளிவாக அடித்துச்சொல்லலாம்.
ஏனென்றால் படைத்த இரட்சகன் அல்லாஹ்வே அவர்களை இவ்வாறு பாராட்டுகிறான். பின்வரும் இறைவசனங்கள் இதை தெளிவுபடுத்துகின்றன.

## நபித்தோழர்களுக்கு அல்லாஹ் வழங்கும் நற்சான்றுகள்.

### உளத்தூய்மை உடையோர்:

(நபியே!) தங்கள் இறைவனுடைய திருப் பொருத்தத்தை நாடி எவர் காலையிலும் மாலையிலும் அவனை(ப் பிரார்த்தித்து) அழைத்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்களை நீர் விரட்டி விடாதீர்,அவர்களுடைய கேள்வி கணக்கு பற்றி உம் மீது பொறுப்பில்லை உம்முடைய கேள்வி கணக்கு பற்றி அவர்கள் மீதும் யாதொரு பொறுப்புமில்லை - எனவே நீர் அவர்களை விரட்டி விட்டால் நீரும் அநியாயம் செய்பவர்களில் ஒருவராகி விடுவீர்; 6:52

(நபியே!) எவர் தம் இறைவனுடைய திருப்பொருத்தத்தை நாடியவர்களாக காலையிலும் மாலையிலும் அவனைப் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறார்களோ அவர்களுடன் நீரும் பொறுமையை மேற்கொண்டிருப்பீராக! இன்னும் உலக வாழ்க்கையின் அலங்காரத்தை நாடி அ(த்தகைய)வர்களை விட்டும் உம் இரு கண்களையும் திருப்பிவிடாதீர், இன்னும் எவனுடைய இதயத்தை நம்மை நினைவு கூர்வதில் இருந்து நாம் திருப்பி விட்டோமோ அவனை நீர் வழிபடாதீர், ஏனெனில் அவன் தன் இச்சையைப் பின் பற்றியதனால் அவனுடைய காரியம் வரம்பு மீறியதாகி விட்டது. 18:28

### இறையச்சம் உடையோர், இறை நேசம் பெற்றோர், நற்குணங்கள் உடையோர் சொர்க்கவாதிகள்.

இன்னும் நீங்கள் உங்கள் இறைவனின் மன்னிப்பைப் பெறுவதற்கும் சுவனபதியின் பக்கமும் விரைந்து செல்லுங்கள், அதன் (சுவனபதியின்) அகலம் வானங்கள் பூமியைப் போலுள்ளது, அது பயபக்தியுடையோருக்காகவே தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது.
(பயபக்தியுடையோர் எத்தகையோர் என்றால்) அவர்கள் இன்பமான (செல்வ) நிலையிலும் துன்பமான (ஏழ்மை) நிலையிலும் (இறைவனின்பாதையில்) செலவிடுவார்கள், தவிர கோபத்தை அடக்கிக்கொள்வார்கள், மனிதர்(கள் செய்யும்

பிழை)களை மன்னிப்போராய் இருப்பார்கள், (இவ்வாறு அழகாக) நன்மை செய்வோரையே அல்லாஹ் நேசிக்கின்றான்.

தவிர மானக் கேடான ஏதேனும் ஒரு செயலை அவர்கள் செய்து விட்டாலும் அல்லது (ஏதேனும் பாவத்தினால்) தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டாலும் உடனே அவர்கள் (மனப்பூர்வமாக) அல்லாஹ்வை நினைத்து தங்கள் பாவங்களுக்காக மன்னிப்புத்தேடுவார்கள், அல்லாஹ்வைத் தவிர வேறு யார் பாவங்களை மன்னிக்க முடியும்? மேலும் அவர்கள் அறிந்து கொண்டே தங்கள் (பாவ)காரியங்களில் தரிபட்டிருந்து விடமாட்டார்கள்.

அத்தகையோருக்குரிய (நற்)கூலி அவர்களுடைய இறைவனிடமிருந்து மன்னிப்பும், சுவனபதிகளும் ஆகும், அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக் கொண்டே இருக்கும், அவர்கள் அங்கே என்றென்றும் இருப்பா;,இத்தகைய காரியங்கள் செய்வோரின் கூலி நல்லதாக இருக்கிறது. 3:133,134,135,136

## இறை திருப்தியைப் பெற்றவர்கள்.

அப்போது அல்லாஹ் இது உண்மை பேசுபவர்களுக்கு அவர்களுடைய உண்மை பலனளிக்கும் நாளாகும், கீழே சதா நீரருவிகள் ஒலித்தோடிக் கொண்டிருக்கும் சுவனபதிகள் அவர்களுக்குண்டு அவற்றில் அவர்கள் என்றென்றும் இருப்பார்கள், அல்லாஹ் அவர்களைக் பொருந்திக் கொண்டான், அல்லாஹ்வை அவர்களும் பொருந்திக் கொண்டார்கள் - இது மகத்தான பெரும் வெற்றியாகும். 5:119

இன்னும் முஹாஜிர்களிலும் அன்ஸார்களிலும் முதலாவதாக (ஈமான்கொள்வதில்) முந்திக் கொண்டவர்களும் அவர்களை (எல்லா) நற்கருமங்களிலும் பின்தொடர்ந்தவர்களும் இருக்கின்றார்களே அவர்கள் மீது அல்ல்லாஹ் திருப்தி அடைகிறான், அவர்களும் அவனிடம் திருப்தியடைகின்றார்கள், அன்றியும் அவர்களுக்காக சுவனபதிகளைச் சித்தப்படுத்தியிருக்கின்றான், அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். அவர்கள் அங்கே என்றென்றும் தங்கியிருப்பார்கள் - இதுவே மகத்தான வெற்றியாகும். 9:100

## உண்மையில் அவர்களே முஃமின்கள்: என்று வர்ணிக்கிறான்

எவர்கள் ஈமான் கொண்டு (தம்) ஊரைத் துறந்து அல்லாஹ்வின் பாதையில் போர் புரிகின்றாரோ அ(த்தகைய)வரும் எவர் அ(த்தகைய)வர்களுக்குப் புகலிடம் கொடுத்து உதவி செய்கின்றார்களோ அவர்களும் தான் உண்மையான முஃமின்கள் ஆவார்கள் - அவர்களுக்கு மன்னிப்பு உண்டு. கண்ணியமான உணவும் உண்டு. 7:74

முஃமின்கள் அந்த மரத்தடியில் உம்மிடம் வாக்குறுதி செய்த போது மெய்யாகவே அல்லாஹ் அவர்களைப் பொருந்தி( ஏற்று)க் கொண்டான், அவர்களுடைய இதயங்களில் இருப்பதை அவன் அறிந்து அவர்கள் மீது (சாந்தியையும்) அமைதியை(யும்) இறக்கியருளி அவர்களுக்கு அண்மையில் வெற்றியையும் அளித்தான். 48:18

## இறைவனின் படை: என வர்ணிக்கிறான்

அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பும் சமூகத்தினர் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் பகைத்துக் கொண்டவர்களை நேசிப்பவர்களாக (நபியே!) நீர் காணமாட்டீர். அவர்கள் தங்கள் பெற்றோராயினும் தங்கள் புதல்வர்களாயினும் தங்கள் சகோதரர்களாயினும் தங்கள் குடும்பத்தினராயினும் சரியே, (ஏனெனில்) அத்தகையவர்களின் இதயங்களில் (அல்லாஹ்); ஈமானை எழுதி(ப் பதித்து) விட்டான், மேலும் அவன் தன்னிடமிருந்து (அருள் என்னும்) ஆன்மாவைக் கொண்டு பலப்படுத்தியிருக்கிறான், சுவர்க்கச் சோலைகளில் என்றென்றும் இருக்கும்படி அவர்களைப் பிரவேசிக்கச் செய்வான், அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொண்டான், அவர்களும் அவனைப் பொருந்திக் கொண்டார்கள். அவர்கள் தாம் அல்லாஹ்வின் கூட்டத்தினர், அறிந்து கொள்க: நிச்சயமாக அல்லாஹ்வின் கூட்டத்தினர் தாம் வெற்றி பெறுவார்கள். 58:22

## நிச்சயமாக எவர் ஈமான் கொண்டு ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்கிறார்களோ அவர்கள் தாம் படைப்புகளில் மிக மேலானவர்கள்.

அவர்களுடைய நற்கூலி அவர்களுடைய இறைவனிடத்திலுள்ள அத்னு என்னும் சுவர்க்கச் சோலைகளாகும். அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக் கொண்டு இருக்கும். அவற்றில் அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள். அல்லாஹ்வும் அவர்களைப் பற்றி திருப்தி அடைவான்.அவர்களும் அவனைப் பற்றி திருப்தி அடைவார்கள். தன் இறைவனுக்குப் பயப்படுகிறாரே அத்தகையவருக்கே இந்த மேலான நிலை உண்டாகும். 98:7,8

### இறைவனுக்காக தங்களையே அர்ப்பணித்தவர்கள் என வர்ணிக்கிறான்.

இன்னும் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடித் தன்னையே தியாகம் செய்பவனும் மனிதர்களில் இருக்கின்றான், அல்லாஹ் (இத்தகைய தன்) நல்லடியார்கள் மீது அளவற்ற அன்புடையோனாக இருக்கின்றான். 2:207

### இலட்சியங்களில் வாய்மையாளர்கள். இலட்சியங்களை நிறைவேற்றியவர்கள்.நிறைவேற்றத் துடிப்பவர்கள் என வர்ணிக்கிறான்.

மு.்.மின்களில் நின்றுமுள்ள மனிதர்கள் அல்லாஹ்விடம் அவர்கள் செய்துள்ள வாக்குறுதியில் உண்மையாக நடந்து கொண்டார்கள், அவர்களில் சிலா; (ஷஹீதாக வேண்டும் என்ற) தம் இலட்சியத்தையும் அடைந்தார்கள், வேறு சிலா; (ஆர்வத்துடன் அதை) எதிர்ப்பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள் - (எந்த நிலையிலும்) அவர்கள் தங்கள் வாக்குறுதியிலிருந்து சிறிதும் மாறுபடவில்லை. 33:23

### தங்களுக்கு தேவையிருந்தும் கூட மற்றவர்களுக்கே முன்னுரிமை அளிப்பார்கள் எனவும் வர்ணிக்கிறான்.

இன்னும் சிலருக்கும் (இதில் பங்குண்டு, அவர்கள் மதினாவில் முஹாஜிர்களுக்கு) முன்னரே ஈமானுடன் வீட்டை அமைத்துக் கொண்டவர்கள், அவர்கள் நாடு துறந்து தங்களிடம் குடியேறி வந்தவர்களை நேசிக்கின்றனர், அன்றியும் அ(வ்வாறு குடியேறிய)வர்களுக்குக் கொடுக்கப்பட்டதிலிருந்து தங்கள் நெஞ்சங்களில் தேவைப்பட மாட்டார்கள்,மேலும் தங்களுக்குத் தேவையிருந்த போதிலும் தங்களைவிட அவர்களையே (உதவி பெறுவதற்குத் தக்கவர்களாகத்) தோ;ந்தெடுத்துக்கொள்வார்கள் - இவ்வாறு எவர்கள் உள்ளத்தின் உலோபித்தனத்திலிருந்து காக்கப் பட்டார்களோ அத்தகையவர்கள் தான் வெற்றி பெற்றவர்கள் ஆவார்கள். 59:9

### அவர்கள் சுவர்க்கவாசிகள் என்றும் அவர்களின் பண்புகள் இவ்வாறு அமைந்திருக்கும் என்றும் அல்லாஹ் சிறப்பித்துச் சொல்லிக்காட்டுகிறான்.

நிச்சயமாக நல்லவர்கள் (சுவர்க்கத்தில்) குவளைகளிலிருந்து (பானம்)அருந்துவார்கள். அதன் கலப்பு கா.்.பூராக (கற்பூரமாக) இருக்கும். (கா.்.பூர்) ஒரு சுனையாகும். அதிலிருந்து அல்லாஹ்வின் நல்லடியார்கள் அருந்துவார்கள். அதை (அவர்கள் விரும்பும் இடங்களுக்கெல்லாம் ஓடைகளாக ஓடச் செய்வார்கள்.

அவர்கள் தாம் (தங்கள்) நேர்ச்சைகளை நிறைவேற்றி வந்தவர்கள். (கியாம) நாளை அவர்கள் அஞ்சி வந்தார்கள். அதன் தீங்கு எங்கும் பரவியிருக்கும். மேலும் அ(வ்விறை)வன் மீதுள்ள பிரியத்தினால் ஏழைகளுக்கும் அநாதைகளுக்கும் சிறைப் பட்டோருக்கும் உணவளிப்பார்கள்.

உங்களுக்கு நாங்கள் உணவளிப்பதெல்லாம் அல்லாஹ்வின் முகத்திற்காக (அவன் திருப்பொருத்தத்திற்காக). உங்களிடமிருந்து பிரதிபலனையோ (அல்லது நீங்கள்) நன்றி செலுத்த வேண்டுமென்பதையோ நாங்கள் நாடவில்லை” (என்று அவர்கள் கூறுவர்).
எங்கள் இறைவனிடமிருந்து (எங்கள்) முகம் கடுகடுத்து சுண்டி விடும் நாளை நிச்சயமாக நாங்கள் பயப்படுகிறோம்” (என்றும் கூறுவர்).

எனவே அல்லாஹ் அந்நாளின் தீங்கை விட்டும் அவர்களைப் பாதுகாத்து அவர்களுக்கு முகச் செழுமையையும் மனமகிழ்வையும் அளிப்பான். 76:5,6,7,8,9,10,11

## அல்லாஹ்விடம் உயர் அந்தஸ்தைப் பெற்றோர்,வெற்றி பெற்றோர்

எவர்கள் ஈமான் கொண்டு தம் நாட்டை விட்டும் வெளியேறித் தம்செல்வங்களையும் உயிர்களையும் தியாகம் செய்து அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் செய்தார்களோ அவர்கள் அல்லாஹ்விடம் பதவியால் மகத்தானவர்கள். மேலும் அவர்கள் தாம் வெற்றியாளர்கள். 9:20

மக்கா வெற்றிக்கு முன் செலவிட்டு, போரிட்ட தோழர்களுக்கு வேறெவரும் சமமாக மாட்டார்கள் என்றும் அவர்களே பதவியால் உயர்ந்தோர் என்றும் வர்ணிக்கிறான்

அல்லாஹ்வின் பாதையில் நீங்கள் செலவு செய்யாதிருக்க உங்களுக்கு என்ன நேர்ந்தது? வானங்கள் பூமியிலுள்ளவற்றின் அனந்தர பாத்தியதை அல்லாஹ்வுடையதே! (மக்கா) வெற்றிக்கு முன்னர் செலவு செய்து போரிட்டவர்களுக்கு உங்களில் இருந்து(எவரும்) சமமாகமாட்டார், (மக்காவின் வெற்றிக்குப்) பின் செலவு செய்து போரிட்டவர்களை விட அவர்கள் பதவியால் மிகவும் மகத்தானவர்கள், எனினும் அல்ல்லாஹ் எல்லோருக்குமே அழகானதையே வாக்களித்திருக்கின்றான். அன்றியும் அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கு தெரிந்தவன். 57:10

## போரில் பலத்த காயங்கள் பட்ட பின்னரும் அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் பதிலளித்தோர் என வர்ணிக்கிறான்

அவர்கள் எத்தகையோரென்றால் தங்களுக்கு(ப் போரில்) காயம் பட்ட பின்னரும் அல்லாஹ்வுடையவும் (அவனுடைய) ரஸலுடையவும் அழைப்பை ஏற்(று மீண்டும் போருக்குச் சென்)றனர், அத்தகையோரில் நின்றும் யார் அழகானவற்றைச் செய்து இன்னும் பாவத்திலிருந்து தங்களைக் காத்துக் கொள்கிறார்களோ அவர்களுக்கு மகத்தான நற்கூலியிருக்கிறது. 3:172

## நபியை ஸஹாபாக்களைக் கொண்டு போரில் பலப்படுத்தியதாக வர்ணிக்கிறான்

அவர்கள் உம்மை ஏமாற்ற எண்ணினால் - நிச்சயமாக அல்லாஹ் உமக்குப் போதுமானவன் - அவன் தான் உம்மைத் தன் உதவியைக்கொண்டும் மு..மின்களைக் கொண்டும் பலப்படுத்தினான் 8:62

## சத்தியத்திற்கு சத்தியத்தைக் கொண்டு வழிகாட்டுவோர், நீதி செலுத்துவோர் என வர்ணிக்கிறான்

நாம் படைத்தவர்களில் ஒரு கூட்டத்தார் இருக்கின்றார்கள். அவர்கள் சத்தியத்தைக் கொண்டு(மனிதர்களுக்கு) வழியைக் காட்டுகிறார்கள், அதைக் கொண்டு நீதியும் செலுத்துகிறார்கள். 7:181

## எல்லா நன்மைகளையும் பெற்றோர் என்றும் அவர்களே வெற்றியாளர்கள் என்றும் சுவர்க்கவாசிகள் என்றும் வர்ணிக்கிறான்

எனினும் (அல்லாஹ்வின்) தூதரும் அவருடன் இருக்கும் மு..மின்களும் தங்கள் செல்வங்களையும் தங்கள் உயிர்களையும் அர்ப்பணம் செய்து போர் புரிகிறார்கள், அவர்களுக்கே எல்லா நன்மைகளும் உண்டு - இன்னும் அவர்கள் தாம் வெற்றியாளர்கள்.

அவர்களுக்காக அல்லாஹ் சுவனபதிகளைச் சித்தம் செய்து வைத்திருக்கின்றான், அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கின்றன.அவற்றில் அவர்கள் என்னாளும் இருப்பார்கள். இதுவே மகத்தான பெரும் வெற்றியாகும். 9:88

தக்வாவிற்கு தகுதியுடையோர் என்றும் அவர்கள் மீது அமைதியை அல்லாஹ்வே இறக்கினான் என்றும் வர்ணிக்கிறான்.

(காஃபிராக) நிராகரித்துக் கொண்டிருந்தார்களே அவர்கள் வைராக்கியத்தை - முட்டாள்தனமான வைராக்கியத்தை - தங்கள் உள்ளங்களில் உண்டாக்கிக் கொண்ட சமயம் அல்லாஹ் தன் தூதர் மீதும் முஃமின்கள் மீதும் தன் அமைதியை இறக்கியருள் செய்து அவர்களுக்கு (பயபக்தியூட்டும்) தக்வாவுடைய வாக்கியத்தின் மீதும் அவர்களை நிலைபெறச் செய்தான், அவர்களோ அதற்கு மிகவும் தகுதியுடையவர்களாகவும் அதற்குரியவர்களாகவும் இருந்தார்கள் - அல்லாஹ் சகல பொருள்களையும் நன்கறிந்தவனாக இருக்கின்றான். 48:26

## இறை நம்பிக்கையோரிடத்தில் இரக்கம்மிக்கோர், இறைநிராகரிப் போரிடத்தில் கண்டிப்பாக இருப்போர் என வர்ணிக்கிறான்

முஹம்மது (ஸல்) அல்லாஹ்வின் தூதராக இருக்கின்றார், அவருடன் இருப்பவர்கள் காஃபிர்களிடம் கண்டிப்பானவர்கள் தங்களுக்குக்கிடையே இரக்கம் மிக்கவர்கள். ருகூஃ செய்பவர்களாகவும் ஸுஜுது செய்பவர் களாகவும், அல்லாஹ்விடமிருந்து (அவன்) அருளையும்(அவனுடைய) திருப்பொருத்தத்தையும் விரும்பி வேண்டுபவர்களாகவும் அவர்களை நீர் காண்பீர், அவர்களுடைய அடையாளமாவது: அவர் களுடைய முகங்களில் (நெற்றியில்) ஸுஜுதுடைய அடையாளமிருக்கும், இதுவே தவ்றாத்திலுள்ள அவர்களின் உதாரணமாகும் இன்ஜீலிலுள்ள அவர்கள் உதாரணமாவது: ஒரு பயிரைப் போன்றது, அது தன் முளையைக் கிளப்பி(ய பின்) அதை பலப்படுத்துகிறது, பின்னர் அது பருத்துக் கனமாகி பிறகு விவசாயிகளை மகிழ்வடையச் செய்யும் விதத்தில் அது தன் அடித்தண்டின் மீது நிமிர்ந்து செவ்வையாக நிற்கிறது,இவற்றைக் கொண்டு நிராகரிப்பவர்களை அவன் கோபமூட்டுகிறான் -ஆனால் அவர்களில் எவர்கள் ஈமான் கொண்டு ஸாலிஹான (நல்ல)அமல்கள் செய்கிறார்களோ அவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான கூலியையும் வாக்களிக்கின்றான். 48:29

## நடுநிலை சமுதாயம் என்றும் நபியை பின்பற்றுவோர் என்றும் வர்ணிக்கிறான்.

இதே முறையில் நாம் உங்களை ஒரு நடுநிலையுள்ள உம்மத்தாக (சமுதாயமாக) ஆக்கியுள்ளோம், (அப்படி ஆக்கியது) நீங்கள் மற்ற மனிதர்களின் சாட்சியாளர்களாக இருப்பதற்காகவும் ரஸூல் (நம்தூதர்) உங்கள் சாட்சியாளாராக இருப்பதற்காகவுமேயாகும், யார் (நம்)தூதரைப் பின்பற்றுகிறார்கள், யார் (அவரைப் பின்பற்றாமல்) தம் இரு குதிங்கால்கள் மீது பின் திரும்பிச் செல்கிறார்கள் என்பதை

அறி(வித்துவிடு)வான் வேண்டி கிப்லாவை நிர்ணயித்தோம், இது அல்லாஹ் நேர்வழி காட்டியோருக்குத் தவிர மற்றவர்களுக்கு நிச்சயமாக ஒரு பளுவாகவே இருந்தது, அல்லாஹ் உங்கள் ஈமானை (நம்பிக்கையை)வீணாக்கமாட்டான், நிச்சயமாக அல்லாஹ் மனிதர்கள் மீது மிகப்பெரும் கருணை காட்டுபவன் நிகரற்ற அன்புடையோன்.2:143

## சிறந்த சமுதாயம் என்றும் நன்மையை ஏவி தீமையை தடுப்போர் என்றும் வர்ணிக்கிறான்

மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தில்) சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள், (ஏனெனில்) நீங்கள் நல்லதைச் செய்ய ஏவுகிறீர்கள், தீயதை விட்டும் விலக்குகிறீர்கள், இன்னும் அல்லாஹ்வின் மேல் (திடமாக) நம்பிக்கை கொள்கிறீர்கள்... 3:110

இவ்விரு வசனங்களும் இறக்கப்பட்ட காலத்தில் நபித்தோழர்களைத் தவிர வேறு யார் இருந்திருக்க முடியும்?; எனவே அவர்களின் உயர்வான அந்தஸ்தின் காரணத்தாலும் அவர்களின் சிறப்புகளின் காரணத்தாலும் மறுமையில் ஏனைய மக்களுக்கு அவர்கள் சாட்சியாளர்களாக இருப்பர்.

இவ்வசனங்களில் கூறப்பட்ட அனைத்து தன்மைகளும் அனைத்து நபித்தோழர்களையும் குறிக்கும் என பெரும்பான்மையான அறிஞர்கள் கூறுகிறார்கள் என இமாம் இப்னுல் ஜவ்ஸி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

மேலும் மேற்கூறப்பட்ட பல வசனங்களுக்கு, பின்னால் வந்த இமாம்கள், அறிஞர்பெருமக்கள் விளக்கம் கூறும் போது இவ்வசனங்களில் கூறப்படும் அனைவரும் நபித்தோழர்களே என்றும் அவர்களின் காலத்தில் தான் இவ்வசனங்கள் இறக்கப்பட்டது என்றும் அவர்களைத் தவிர இவ்வசனங்கள் வேறு யாரைக்குறிக்கும் என்றும் வாதம் வைக்கின்றனர்.

இப்படி அல்லாஹுத் தஆலா தன் திருமறைக்குர்ஆனில் பல இடங்களில் நபித்தோழர்களின் கண்ணியத்தையும், அவர்களின் சிறப்பியல்புகளையும், அவர்களின் உயர்வான நற்குணங்களையும், அவர்களின் தன்னலமற்ற தியாகங்களையும், தீனுல்

இஸ்லாத்திற்காக அவர்கள் ஆற்றிய பங்களிப்பையும்,அவர்களின் இக்ஃலாஸை(உளத்தூய்மை)யும் பட்டியலிட்டுக் காட்டுகின்றான்.

அவ்வாறே நபி (ஸல்) அவர்களும் அல்லாஹ்வால் புகழ்ந்துரைக்கப்பட்ட ஸஹாபாக்களைக் குறித்து பல்வேறு விதமாக வர்ணித்திருக்கிறார்கள்.

நபித் தோழர்களைக் குறித்து நமது மனங்களில் எவ்வித காழ்ப்புணர்ச்சியும் கொள்ளாமல் நன்மதிப்பு ஏற்பட்டு அவர்களைப் போல் இல்லாவிட்டாலும் ஓரளவிற்காவது நன்மைகளை செய்து இறைவனுக்கும் இறைத்தூதருக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்பதே நமது பேராவல்.

## நபித்தோழர்களின் காலம் பொற்காலம்;

என் சமுதாயத்தினால் சிறந்தவர்கள் என்னுடைய தலைமுறையினரே. பிறகு, (சிறந்தவர்கள்) அவர்களை அடுத்துவரும் தலைமுறையினர் ஆவர். அதற்கு அடுத்து (சிறந்தவர்கள்) அவர்களையடுத்து வரும் தலைமுறையினர் ஆவர் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
(இதை அறிவிக்கும் நபித்தோழர்) இம்ரான் இப்னு ஹுஸைன் (ரலி) கூறினார்: நபி (ஸல்) அவர்கள் தங்களின் தலை முறைக்குப் பிறகு இரண்டு தலைமுறைகளைக் கூறினார்களா, அல்லது மூன்று தலைமுறைகளைக் கூறினார்களா என்று எனக்குத் தெரியாது. புகாரி 3650

## நபித்தோழர்களைத் திட்ட வேண்டாம் என எச்சரிக்கை.

என் தோழர்களைத் திட்டாதீர்கள். ஏனெனில், உங்களில் ஒருவர் உஹுது மலையளவு தங்கத்தைத் செலவு செய்தாலும் (என் தோழர்களான) அவர்கள் (இறை வழியில்) செலவு செய்த இரண்டு கைக் குவியல் அல்லது அதில் பாதியளவைக் கூட (அவரின்)அந்த தர்மம் எட்ட முடியாது என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஸயீத் அல்குத்ரி (ரலி) அறிவிக்கிறார்கள். புகாரி 3673.

என் தோழர்களை எவன் திட்டுகிறானோ அவன் மீது அல்லாஹ்வுடைய சாபமும், மலக்குகளின் சாபமும், ஒட்டு மொத்த மக்களின் சாபமும் உண்டாகட்டுமாக என்று நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். அல்முஃஜமுல் கபீர் லித்தப்ரானி

"நபித்தோழர்களின் தவறுகளை விமர்ச்சிக்க நமக்கு எத்தகைய தகுதியும் இல்லை நாம் யார்? அவர்களின் தவறுகளை விமர்ச்pக்க"" என்றவர்கள் என் தோழர்களை திட்டாதீர்கள் என்ற கட்டளையையும் மீறி அவர்களின் தவறுகளை சுட்டிக் காட்டுகிறோம் என்ற போர்வையில் இன்று அவர்களை வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டுகிறார்கள்.அவர்கள் மீது சேற்றை வாரி இறைக்கிற சகோதரர்கள் மேற்கண்ட ஹதீஸையும் பின்னால் வருகிற பல ஹதீஸ்களையும் மறந்துவிடவேண்டாம்.

## அன்சாரிகளை நேசிப்பது இறைநம்பிக்கையின் அடையாளம்.

இறை நம்பிக்கையாளரைத் தவிர வேறெவரும் அன்சாரிகளை நேசிக்க மாட்டார்கள் அவர்களை நயவஞ்சகர்களைத் தவிர வேறெவரும் வெறுக்கவும் மாட்டார்கள். யார் அவர்களை நேசிக்கிறார்களோ அவர்களை அல்லாஹ்வும் நேசிக்கிறான். யார் அவர்களை வெறுக்கறிhர்களோ அவர்களை அல்லாஹ்வும் வெறுக்கிறான் என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். புகாரி 3783, முஸ்லிம்

## நபித்தோழர்களே முன்மாதிரி என வர்ணித்திருக்கிறார்கள்

எனக்குப் பின் என் தோழர்களில் அபூபக்ரையும் உமரையும் முன்மாதிரியாக ஆக்கிக் கொள்ளுங்கள் அம்மாருக்கு நான் காட்டிய என் வழியைப் பின்பற்றுங்கள் இப்னு மஸ்வூதின் வாக்கை பற்றிப்பிடியுங்கள்.

பைஹகீ திர்மிதீ

## அல்லாஹ்வை அஞ்ச வேண்டும் என அறிவுரை

என் தோழர்கள் விஷயத்தில் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். என் தோழர்கள் விஷயத்தில் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்.எனக்குப் பிறகு தாக்குதலுக்கான இலக்காக அவர்களை ஆக்கிவிடாதீர்கள், அவர்களை யார் நேசிக்கிறார்களோ என்னை நேசித்ததன் காரணமாகவே அவர்களை நேசிக்கிறார்,அவர்களை யார் வெறுக்கிறார்களோ என்னை வெறுத்ததன் காரணமாகவே அவர்களை வெறுக்கிறார். அவர்களை நோவினை செய்தவர் என்னை நோவினை செய்தவராவார்,என்னை நோவினை செய்தவர் அல்லாஹ்வை நோவினை செய்தவராவார்,அல்லாஹ்வை எவன் நோவினை செய்கிறானோ அவனுக்கு அல்லாஹ்வின் தண்டனை ஏற்பட்டுவிடக்கூடும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். திர்மிதீ

நபித்தோழர்களை சகட்டுமேனிக்கு விமர்சனம் செய்யும் என் அன்புச் சகோதரர்கள் மேற்கண்ட ஹதீஸை கவனத்தில் கொண்டு செயல்படவேண்டுகிறோம்.

## நபித்தோழர்கள் அனைவரும் சொர்க்கவாதிகளே

நபித்தோழர்கள் அனைவரும் சொர்க்கவாதிகளே என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.
சொர்க்கத்திற்கு நற்சான்று கூறப்பட்ட மேண்மைமிகு நபித்தோழர்களின் தவறுகளை சுட்டிக்காட்டுகிறோம் என்று கூறி அவர்களின் கண்ணியத்திற்கு களங்கம் கற்பிக்க முயலும் சகோதரர்கள் சற்று நிதானமாக சிந்தித்து செயல்பட கேட்டுக் கொள்கிறோம்.
ஒரு சில நபித்தோழர்களை தனிப்பட்ட முறையிலும் பலரை பொதுவான முறையிலும் சொர்க்கவாதிகள் என்று நற்சான்று பகர்ந்திருக்கின்றார்கள். அப்படிப்பட்ட கண்ணியவான்களில் சிலரை இங்கே நாம் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். அவர்களில் சிலர்...

## அபூபக்கர் (ரலி) அவர்களைக் குறித்து:

'ஒருவர் இறைவழியில் ஒரு ஜோடிப் பொருட்களைச் செலவு செய்தால் அவர் சொர்க்கத்தின் வாசல்களிருந்து,'அல்லாஹ்வின் அடியாரே! இது (பெரும்) நன்மையாகும்! (இதன் வழியாகப் பிரவேசியுங்கள்!) 'என்று அழைக்கப்படுவார். (தம் உலக வாழ்வின் போது) தொழுகையாளிகளாய் இருந்தவர்கள் தொழுகையின் வாசல் வழியாக அழைக்கப்படுவர்;. அறப்போர் புரிந்தவர்கள் 'ஜிஹாத்' எனும் வாசல் வழியாக அழைக்கப்படுவர். நோன்பாளிகளாய் இருந்தவர்கள் 'ரய்யான்' எனும் வாசல் வழியாக அழைக்கப்படுவர்;. தர்மம் செய்தவர்கள் 'சதகா' எனும் வாசல் வழியாக அழைக்கப்படுவர் என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது அபூ பக்ர்(ரலி) 'இறைத்தூதர் அவர்களே! என் தாயும் தந்தையும் உங்களுக்கு அர்ப்பணமாகட்டும்! இந்த வாசல்கள் அனைத்திலிருந்தும் அழைக்கப்படும் ஒருவருக்கு எந்தத் துயரும் இல்லையே! எனவே, எவரேனும் அனைத்து வாசல்கள் வழியாகவும் அழைக்கப்படுவாரா?' என்று கேட்டார். நபி (ஸல்) அவர்க 'ஆம்! நீரும் அவர்களில் ஒருவராவீர் என்று நம்புகிறேன்!'' என்றார்கள் என அபூ ஹுரைரா(ரலி) அறிவிக்கிறார்கள். புகாரி 1897

நாங்கள் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் மக்களிடையே சிறந்தவர்கள் இன்னார், இன்னார் என்று மதிப்பிட்டு வந்தோம். (முதலில்) அபூ பக்ர் (ரலி) அவர்களைச் சிறந்தவராக மதிப்பிட்டோம். பிறகு உமர் இப்னு கத்தாப் (ரலி) அவர்களையும் பிறகு உஸ்மான் இப்னு அஃப்பான் (ரலி) அவர்களையும் சிறந்தவர்களாக மதிப்பிட்டு வந்தோம் என இப்னு உமர் (ரலி) கூறினார். புகாரி 3655.

## உமர் (ரலி) அவர்களைக் குறித்து:

நாங்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் இருந்து கொண்டிருந்தபோது அவர்கள்,'நான் தூங்கிக் கொண்டிருந்தபோது (கனவில்) என்னை சொர்க்கத்தில் கண்டேன்.அப்போது (அங்கிருந்த) அரண்மனை ஒன்றின் பக்கத்தில் ஒரு பெண் (உலகில் இறைவணக்கம் புரிபவளாய் இருந்து வந்ததைக் குறிக்கும் வகையில் தன் அழகையும் பொலிவையும் இன்னும் அதிகரித்துக் கொள்ளவும்) உளூச் செய்து கொண்டிருந்தாள். நான், 'இந்த அரண்மனை யாருடையது?' என்று (ஜிப்ரிலிடம்) கேட்டேன். 'உமர் இப்னு கத்தாப் அவர்களுக்குரியது' என்று (ஜிப்ரில் அவர்களும் மற்றும் அங்கிருந்த வானவர்களும்) பதிலளித்தார்கள். எனவே, நான் அந்த அரண்மனையில் நுழைந்து அதைப் பார்க்க விரும்பினேன். அப்போது எனக்கு உமாpன் ரோஷம் நினைவுக்கு வந்தது. (எனவே, அதில் நுழையாமல் திரும்பிவிட்டேன்)உடனே,அங்கிருந்து திரும்பிச் சென்று விட்டேன்'' என்று கூறினார்கள். இதைக் கேட்ட உமர் (ரலி)அழுதார்கள். பிறகு, 'இறைத்தூதர் அவர்களே! தங்களிடமா நான் ரோஷம் காட்டுவேன்?'என்று கேட்டார்கள். என அபூ ஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரி 3242.

(ஒரு முறை) நபி (ஸல்) அவர்களும் அபூ பக்ர், உமர், உஸ்மான் (ரலி) ஆகியோரும் உஹுது மலை மீது ஏறினார்கள். அது அவர்களுடன் நடுங்கியது. அப்போது நபி (ஸல்) அவர்கள், 'உஹுதே! அசையாமல் இரு! ஏனெனில், உன் மீது ஓர் இறைத்தூதரும், (நானும்) ஒரு சித்தீக்கும், இரண்டு உயிர்த் தியாகிகளும் உள்ளனர்'' என்று கூறினார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரி 3675.

## உஸ்மான் (ரலி) அவர்களைக் குறித்து:

நான் என் வீட்டில் உளூச் செய்துவிட்டுப் புறப்பட்டேன். (அப்போது எனக்குள்), 'நான் இறைத்தூதர்(ஸல்) அவர்களைவிட்டுப் பிரியாமல் அவர்களுடனேயே என்னுடைய இந்தநாள் (முழுவதும்) இருப்பேன்'' என்று சொல்லிக் கொண்டேன். நான் பள்ளி வாசலுக்கு வந்து நபி (ஸல்) அவர்களைக் குறித்துக் கேட்டேன். அப்போது மக்கள், 'நபி (ஸல்) அவர்கள் புறப்பட்டு இந்தப் பக்கம் போனார்கள்'' என்று கூறினர். நான் (நபி ஸல்) -அவர்கள் சென்ற திசையில்) அவர்களின் அடிச்சுவட்டில் அவர்களைப் பற்றி (இந்த வழியாகச் சென்றார்களா என்று) விசாரித்தபடி சென்றேன். இறுதியில் (குபாவுக்கு அருகிலுள்ள ஒரு தோட்டமான) பிஃரு அரிஸுக்குள் சென்று அதன் வாசலில் அமர்ந்தேன்.அதன் வாசல் பேரிச்ச மட்டையால் தயாரிக்கப்பட்டிருந்தது. இறைத்தூதர்(ஸல்) அவர்கள் தம் (இயற்கைக்) கடனை நிறைவேற்றிக் கொண்டு உளூச்

செய்தார்கள். உடனே, நான் அவர்களிடம் எழுந்து சென்றேன். அவர்கள் (பி∴ரு) அரிஸ் (என்னும் அத்தோட்டத்தில் உள்ள) கிணற்றின் மீது அதன் சுற்றுச் சுவருக்கு நடுவே தம் கால்கள் இரண்டையும் திறந்து கிணற்றுக்குள் தொங்க விட்டபடி அமர்ந்திருந்தார்கள். நான் அவர்களுக்கு சலாம் சொல்லிவிட்டுத் திரும்பிச் சென்று வாசலருகே அமர்ந்து கொண்டேன். நான் (எனக்குள்)'இன்று நான் அல்லாஹ்வின் தூதருடைய வாயில் காவலனாக இருப்பேன்'' என்று சொல்லிக் கொண்டேன். அப்போது அபூ பக்ர்(ரலி) வந்து கதவைத் தள்ளினார்கள். நான்,'யார் அது?' என்று கேட்டேன். அவர்கள், '(நானே) அபூ பக்ர் (வந்துள்ளேன்)'' என்று பதிலளித்தார்கள். உடனே நான், 'சற்றுப் பொறுங்கள்'' என்று சொல்லிவிட்டு (நபி ஸல் அவர்களிடம்) சென்று, 'இறைத்தூதர் அவர்களே! இதோ அபூ பக்ர் அவர்கள் (வந்து)தங்களிடம் உள்ளே வர அனுமதி கேட்கிறார்கள்'' என்று சொன்னேன். நபி (ஸல்) அவர்கள், 'அவருக்கு அனுமதி கொடுங்கள். மேலும், அவர் சொர்க்கவாசி என்று நற்செய்தி சொல்லுங்கள்'' என்று கூறினார்கள். நான் அபூ பக்ர் அவர்களை நோக்கிச் சென்று அவர்களிடம், 'உள்ளே வாருங்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் நீங்கள் சொர்க்கவாசி என்று நற்செய்தி அறிவித்தார்கள்'' என்று சொன்னேன். உடனே, அபூ பக்ர் அவர்கள் உள்ளே வந்து, இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு வலப் பக்கத்தில் அவர்களுடன்(கிணற்றின்) சுற்றுச் சுவரில் அமர்ந்து கொண்டு நபி (ஸல்) அவர்கள் செய்தது போன்றே தம் கால்கள் இரண்டையும் கிணற்றில் தொங்கவிட்டுக் கொண்டு கால்களைத் திறந்து வைத்தார்கள். பிறகு, நான் திரும்பிச் சென்று (வாசலில்) அமர்ந்து கொண்டேன். நான்((முன்பே) என் சகோதர(ர் ஒருவ)ரை உளூச் செய்து என்னுடன் சேர்ந்து கொள்ளும்படி சொல்லி,விட்டுவிட்டு வந்திருந்தேன். எனவே (எனக்குள்), 'அல்லாஹ் இன்னாருக்கு நன்மையை நாடியிருந்தால் அவரை (இங்கு), வரச் செய்வான்'' என்று சொல்லிக்கொண்டேன்.

'' இன்னார்' என்று அபூ மூஸா அல் அஷ் அரி(ரலி) கூறியது தம் சகோதரைக் கருத்தில் கொண்டே'' என்று அறிவிப்பாளர் ஸயீத் இப்னு முஸய்யப் (ரஹ்) கூறினார்:
அப்போது ஒருவர் கதவை அசைத்தார். நான், 'யார் அது?' என்று கேட்டேன். வந்தவர், '(நானே) உமர் இப்னு கத்தாப் (வந்துள்ளேன்)'' என்று சென்னார். நான், 'கொஞ்சம் பொறுங்கள்'' என்று கூறிவிட்டு, இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் வந்து அவர்களுக்கு சலாம் கூறி, 'இதோ, உமர் இப்னு கத்தாப் அவர்கள் வந்து தங்களிடம் (உள்ளே வர)அனுமதி கேட்கிறார்கள்'' என்று சொன்னேன். நபி (ஸல்) அவர்கள், 'அவருக்கு அனுமதி கொடுங்கள் அவர் சொர்க்கவாசி என்று அவருக்கு நற்செய்தி சொல்லுங்கள்'' என்று கூறினார்கள். நான் சென்று, 'உள்ளே வாருங்கள். இறைத்தூதர்(ஸல்) அவர்கள்

நீங்கள் சொர்க்கவாசி என்று உங்களுக்கு நற்செய்தி கூறுகிறார்கள்'' என்று சொன்னேன்.அவர்கள் உள்ளே வந்து கிணற்றின் சுற்றுச் சுவரில் இறைத்தூதர்(ஸல்)அவர்களுக்கு இடப்பக்கம் அமர்ந்து தம் இரண்டு கால்களையும் கிணற்றுக்குள் தொங்கவிட்டார்கள். பிறகு நான் திரும்பிச் சென்று (வாசலருகே) அமர்ந்து கொண்டேன்.'அல்லாஹ் இன்னாருக்கு (என் சகோதரருக்கு) நன்மையை நாடியிருந்தால் அவரை(இங்கு) வரச் செய்வான்'' என்று (முன்போன்றே எனக்குள்) கூறிக் கொண்டேன்.அப்போது ஒருவர் வந்து கதவை ஆட்டினார். நான், 'யார் அது?' என்று கேட்டேன். அவர்,'(நானே) உஸ்மான் இப்னு அஃப்பான் (வந்திருக்கிறேன்)'' என்று பதிலளித்தார்.உடனே,'கொஞ்சம் பொறுங்கள்'' என்று சொல்லிவிட்டு, இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் சென்று அவர்களுக்கு உஸ்மான் அவர்கள் வந்திருக்கும் செய்தியை அறிவித்தேன். நபி (ஸல்)அவர்கள், 'அவருக்கு அனுமதி கொடுங்கள். அவருக்கு நேரவிருக்கும் ஒரு துன்பத்தையடுத்து அவருக்கு சொர்க்கம் கிடைக்கவிருக்கிறது என்று நற்செய்தி சொல்லுங்கள்'' என்று கூறினார்கள். அவ்வாறே நான் உஸ்மான் அவர்களிடம் சென்று அவரிடம், 'உள்ளே வாருங்கள். உங்களுக்கு நேரவிருக்கும் ஒரு துன்பத்தையடுத்து உங்களுக்கு சொர்க்கம் கிடைக்கவிருக்கிறது என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் நற்செய்தி கூறினார்கள்'' என்று சொன்னேன். அவர்கள் உள்ளே வந்து (பார்த்த போது) சுற்றுச் சுவர் (ஒரு பக்கம்) நிரம்பி விட்டிருப்பதைக் கண்டார்கள். எனவே, மற்றொரு பக்கம் நபி (ஸல்) அவர்களுக்கு எதிரே அமர்ந்தார்கள். புகாரி 3674.

## அலீ (ரலி)அவர்களைக் குறித்து:

நபி (ஸல்) அவர்கள் அலீ (ரலி) அவர்களிடம், 'நீங்கள் என்னைச் சேர்ந்தவர்; நான் உங்களைச் சேர்ந்தவன்'' என்று கூறினார்கள். 'இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அலீ (ரலி) அவர்களைக் குறித்து திருப்தியுடனிருந்த நிலையில் இறந்தார்கள்'' என்று உமர் (ரலி) கூறினார். புகாரி

(கைபர் போரின் போது) இறைத்தூதர்(ஸல்) அவர்கள், 'நாளை (இஸ்லாமியச்சேனையின்) கொடியை ஒரு மனிதரிடம் தரப் போகிறேன்.அவரை அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் நேசிக்கிறார்கள், அவரும் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நேசிக்கிறார். அல்லாஹ் அவரின் கரங்களில் வெற்றியை அளிப்பான்'' என்று சொன்னார்கள். எனவே, மக்கள் தம்மில் எவரிடம் அதுகொடுக்கப்படும் என்ற யோசனையில் இரவெல்லாம் மூழ்கியிருந்தனர். காலையானதும் மக்களில் ஒவ்வொருவரும் தன்னிடம் அது கொடுக்கப்பட வேண்டும் என்று ஆசைப்பட்ட வண்ணம் அல்லாஹ்வின் தூதரிடம்

சென்றனர். நபி (ஸல்) அவர்கள், 'அலீ இப்னு அபீ தாலிப் எங்கே?' என்று கேட்டார்கள். மக்கள், 'அவருக்குக் கண்வலி, இறைத்தூதர் அவர்களே!'' என்று கூறினார்கள். உடனே, நபி (ஸல்) அவர்கள், 'அவருக்கு ஆளனுப்பி என்னிடம் அழைத்து வாருங்கள்'' என்று உத்தரவிட்டார்கள். அலீ(ரலி) வந்தவுடன் அவர்களுடைய இரண்டு கண்களிலும் (தம் உமிழ்நீரை) உமிழ்ந்து அவர்களுக்காக (நலத்திற்கு) பிரார்த்தனை புரிந்தார்கள். அவர்களுக்கு (அதற்கு முன்)வலியே இருந்ததில்லை என்பதைப் போன்று அவர்கள் (வலி நீங்கி) குணமடைந்தார்கள்.பிறகு நபி (ஸல்) அவர்கள் அலீ(ரலி) அவர்களிடம் கொடியைக் கொடுத்தார்கள். அப்போது அலீ(ரலி), 'இறைத்தூதர் அவர்களே! அவர்கள் நம்மைப் போன்று (ஒரே இறைவனுக்குக் கீழ்ப்படிந்தவர்களாய்) ஆகும் வரை நான் அவர்களுடன் போரிடட்டுமா? என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள், 'அவர்களின் களத்தில் இறங்கும் வரை நிதானமாகச் செல்லுங்கள். பிறகு அவர்களை இஸ்லாத்திற்கு (வரும்படி) அழையுங்கள். மேலும், இஸ்லாத்தில் அவர்களின் மீது கடமையாகிற அல்லாஹ்விற்குச் செய்யவேண்டிய கடமைகளை அவர்களுக்குத் தெரிவியுங்கள். அல்லாஹ்வின் மீதாணையாக! உங்கள் மூலமாக அல்லாஹ் ஒரேயொரு மனிதருக்கு நேர்வழியை அளிப்பது (அரபுகளின் அருஞ்செல்வமான) சிவப்பு ஒட்டகங்களை (தர்மம் செய்வதை) விட உங்களுக்குச் சிறந்ததாகும்'' என்று கூறினார்கள் என ஸஹ்ல் இப்னு ஸஅத்(ரலி) அறிவிக்கிறார்.புகாரி 3701.

## ஜஅஃபர் இப்னு அபீ தாலிப் (ரலி) அவர்களைக் குறித்து:

ஜஅஃபர் அவர்களிடம் நபி (ஸல்) அவர்கள், 'நீங்கள் என் குணத்திலும் என் தோற்றத்திலும் (என்னை) ஒத்திருக்கிறீர்கள்'' என்று கூறினார்கள். புகாரி

சொர்க்கத்தில் சிறகடித்துப் பறக்கும் நிலையில் ஜாஃபரை நான் கண்டேன் என்று நபியவர்கள் கூறுகிறார்கள். இப்னு ஹிப்பான்.

## நபி (ஸல்) அவர்களின் மகள் ஃபாத்திமா(ரலி) அவர்களைக் குறித்து:

நபி (ஸல்) அவர்கள், 'ஃபாத்திமா, சொர்க்கவாசிகளில் பெண்களின் தலைவியாவார்''
என்று கூறினார்கள். புகாரி

## ஸுபைர் இப்னு அவ்வாம்(ரலி)அவர்களைக் குறித்து:

ஒவ்வோர் இறைத்தூதருக்கும் ஒரு பிரத்யேக உதவியாளர் (ஹவாரிய்யு) உண்டு. என் பிரத்யேக உதவியாளர் ஸுபைர் இப்னு அவ்வாம் ஆவார் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபிர் (ரலி) அறிவிக்கிறார். புகாரி 3719.

## ஸைத்,உஸாமா (ரலி)இவர்களைக் குறித்து:

நபி (ஸல்) அவர்கள், உஸாமா இப்னு ஸைத் (ரலி) அவர்களைத் தளபதியாக்கி ஒரு படையை அனுப்பினார்கள். மக்களில் சிலர் உஸாமா அவர்களின் தலைமையைக் குறை கூறினார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள், '(இப்போது) இவரின் தலைமையை நீங்கள் குறை கூறுகிறீர்கள் என்றால்... (இது ஒன்றும் புதிதல்ல). இதற்கு முன் (மூத்தா போரின் போது) இவரின் தந்தையின் (ஸைத் அவர்களின்) தலைமையையும் நீங்கள் குறை கூறிக் கொண்டிருந்தீர்கள். அல்லாஹ்வின் மீதாணையாக! அவர் (ஸைத்) தலைமைப் பொறுப்புக்குத் தகுதியுடையவராகவே இருந்தார். மேலும், அவர் மக்களிலேயே எனக்கு மிகவும் விருப்பமானவராக இருந்தார். (அவரின் மகனான) இவர் (உஸாமா) தான் அவருக்குப் பின் எனக்கு மிகவும் பிரியமானவராவார்'' என்று கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அறிவிக்கிறார். புகாரி 3730.

நபி (ஸல்) அவர்கள் (சிறார்களாயிருந்த) என்னையும் ஹஸன்(ரலி) அவர்களையும் கையிலெடுத்து 'இறைவா! இவர்கள் இருவரையும் நான் நேசிக்கிறேன் நீயும் நேசிப்பாயாக!'' என்று பிரார்த்திப்பார்கள் என உஸாமா இப்னு ஸைத்(ரலி) அறிவிக்கிறார்.புகாரி 3735.

## பிலால் (ரலி) அவர்களைக் குறித்து:

நபி (ஸல்) அவர்கள், 'நான் (கனவில்) என்னை சொர்க்கத்தில் நுழைந்தவனாகக் கண்டேன். அங்கு நான் அபூ தல்ஹா அவர்களின் மனைவி ருமைஸாவுக்கு அருகே இருந்தேன். அப்போது நான் மெல்லிய காலடி யோசையைச் செவியுற்றேன்.உடனே, 'யார் அது?' என்று கேட்டேன். அதற்கு (அங்கிருந்த வானவர்), 'இவர் பிலால் 'என்று பதிலளித்தார். நான் (அங்கு) ஓர் அரண்மனையைக் கண்டேன். அதன் முற்றத்தில் பெண்ணொருத்தி இருந்தாள். நான், 'இது யாருக்குரியது?' என்று கேட்டேன். அவர், (வானவர்), 'இது உமருடையது' என்று கூறினார். எனவே, நான் அந்த அரண்மனையில் நுழைந்து அதைப் பார்க்க விரும்பினேன். அப்போது (உமரே!) உங்கள் ரோஷம் என் நினைவுக்கு வந்தது (எனவே, அதில் நுழையாமல் திரும்பிவிட்டேன்)'என்று கூறினார்கள். அதற்கு உமர் (ரலி), 'இறைத்தூதர் அவர்களே! உங்களுக்கு என்தந்தையும் என் தாயும் அர்ப்பணமாகட்டும். உங்களிடமா நான் ரோஷம் காட்டுவேன்''என்று கேட்டார்கள் என ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் (ரலி) அறிவிக்கிறார். புகாரி 3679.

## ஸஅத் இப்னு முஆத்(ரலி)அவர்களைக் குறித்து:

நபி (ஸல்) அவர்களுக்குப் பட்டு அங்கி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது.அவர்கள் பட்டை (அணியக் கூடாது என்று) தடை செய்து வந்தார்கள். மக்களோ, அந்த அங்கி(யின் தரத்தை மற்றும் மென்மை)யைக் கண்டு வியந்தார்கள். அப்போது நபி (ஸல்)அவர்கள், 'முஹம்மதின் உயிரைத் தன் கையில் வைத்திருப்பவன் மீது சத்தியமாக! (என் தோழர்) ஸஅத் இப்னு முஆதுக்கு சொர்க்கத்தில் கிடைக்கவிருக்கும் கைக் குட்டைகள்(தரத்திலும் மென்மையிலும்) இதைவிட உயர்ந்தவை'' என்று கூறினார்கள் என அனஸ் (ரலி) அறிவிக்கிறார். புகாரி 3248,3249

## நபியின் பேரர்கள் ஹஸன்,ஹுஸைன்(ரலி)அவர்களைக் குறித்து:

ஹசனும் ஹுசைனும் சொர்க்கவாசிகளின் இளைஞரணித் தலைவர்கள் என நபியவர்கள் கூறியருக்கிறார்கள். திர்மிதீ

## அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் (ரலி) அவர்களைக் குறித்து:

உருவ அமைப்பிலும், நடைமுறையிலும், நபி (ஸல்) அவர்களை ஏறக்குறைய ஒத்திருக்கும் ஒரு மனிதரை நாங்கள் பின்பற்றி நடப்பதற்காக (எங்களுக்குக் காட்டும்படி) ஹுதை:பா (ரலி) அவர்களிடம் கேட்டோம். அவர்கள், 'நபி (ஸல்) அவர்களுக்கு உருவ அமைப்பிலும், போக்கிலும், நடத்தையிலும் கிட்டத்தட்ட ஒத்தவராக உம்மு அப்தின் மகனை (இப்னு மஸ்வூதை) விட வேறெவரையும் நான் அறியமாட்டேன்'' என்று பதிலளித்தார்கள் என அப்துர் ரஹ்மான் இப்னு யஸீத் (ரஹ்) அறிவிக்கிறார்கள்.புகாரி 3762.

## அபூ உபைதா இப்னுல் ஜர்ராஹ் (ரலி) அவர்களைக் குறித்து:

ஒவ்வொரு சமுதாயத்திற்கும் (அதன்) நம்பிக்கைக்குரியவர் ஒருவர் உண்டு. சமுதாயமே! நம்முடைய நம்பிக்கைக்குரியவர் அபூ உபைதா இப்னுல் ஜர்ராஹ் அவர்கள் தாம் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் என அனஸ் (ரலி) மாலிக் (ரலி) அறிவிக்கிறார்கள். புகாரி 3744.

நபி (ஸல்) அவர்கள் நஜ்ரான் வாசிகளிடம், 'நம்பத்தன்மையில் முறையோடு நடந்து கொள்ளும் நம்பிக்கையாளர் (அமீன்) ஒருவரை உங்களுக்கு நிச்சயம் நான் அனுப்புவேன்'' என்று கூறினார்கள். அப்போது நபித்தோழர்கள் (பலர் அந்த 'அமீன்' என்னும் சிறப்பு தமக்கு கிட்டாதா என) பேராவல் கொண்டார்கள். நபி (ஸல்) அவர்கள்

அபூ உபைதா (ரலி) அவர்களை அனுப்பி வைத்தார்கள் என ஹுதை∴பா (ரலி) அறிவிக்கிறார்கள். புகாரி 3745.

## ஹதீஜா (ரலி)அவர்களைக் குறித்து:

நபியவர்களின் அன்பு மனைவி, இஸ்லாத்தை ஏற்ற முதல் பெண்மணி, தன் சொத்துக்கள் அனைத்தையும் தன் ஆருயிர் கணவருக்காகவும்,இந்த இஸ்லாமிய மார்க்கத்தின் வளர்ச்சிக்காகவும் அர்ப்பணித்த தியாகப்பெண் அன்னை ஹதீஜா (ரலி) அவர்கள்

(ஒரு முறை) நபி (ஸல்) அவர்களிடம் (வானவர்) ஜிப்ரில் (அலை) அவர்கள் வந்தார்கள். 'இறைத்தூதர் அவர்களே! இதோ, கதீஜா தம்முடன் ஒரு பாத்திரத்தில் குழம்பு.. அல்லது உணவு அல்லது பானம் எடுத்துக் கொண்டு உங்களை நோக்கி வந்து கொண்டிருக்கிறார். அவர் உங்களிடம் வந்தவுடன் அவருக்கு அவரின் இறைவனின்தரப்பிலிருந்தும் என் தரப்பிலிருந்தும் சலாம் கூறி அவருக்கு சொர்க்கத்தில் கூச்சல் குழப்பமோ, களைப்போ காண முடியாத முத்து மாளிகை ஒன்று தரப்படவிருப்பதாக நற்செய்தி சொல்லுங்கள்'' என்று கூறினார்கள் (அபூ ஹுரைரா(ரலி).புகாரி 3820)

## ஆயிஷா(ரலி)அவர்களைக் குறித்து:

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் ஒரு நாள், 'ஆயிஷே! இதோ (வானவர்) ஜிப்ரில் உனக்கு சலாம் உரைக்கிறார்'' என்று கூறினார்கள். நான், சலாமுக்கு பதில் கூறும் முகமாக 'வஅலைஹிஸ்ஸலாம் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு' அவரின் மீதும் சலம் (இறை சாந்தி) பொழியட்டும். மேலும், அல்லாஹ்வின் கருணையும் அவனுடைய அருள் வளங்களும் பொழியட்டும்'' என்று பதில் முகமன் சொல்லிவிட்டு, 'நான் பார்க்க முடியாதவற்றை நீங்கள் பார்க்கிறீர்கள்' என்று இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் கூறினேன் என ஆயிஷா(ரலி) கூறினார். புகாரி 3768

ஆண்களில் நிறையப் பேர் முழுமை பெற்றிருக்கிறார்கள். ஆனால், பெண்களில் இம்ரானின் மகள் மர்யமையும், ∴பிர் அவ்னின் மனைவி ஆஸியாவையும் தவிர வேறெவரும் முழுமை பெறவில்லை. (உலகின் மற்ற) பெண்களை விட ஆயிஷாவுக்கு இருக்கும் சிறப்பு (மற்ற) எல்லா உணவுகளைக் காட்டிலும் 'ஸரீத்' என்னும் உணவுக்கு இருக்கும் சிறப்பைப் போன்றதாகும் என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ மூஸா அஷ்அரி(ரலி) அறிவிக்கிறார்கள். புகாரி 3769

(உலகின் மற்ற) பெண்களைக் காட்டிலும் ஆயிஷாவுக்கு இருக்கும் சிறப்பு (மற்ற) உணவுகளைக் காட்டிலும் 'ஸாPத்' என்றும் உணவுக்கு இருக்கும் சிறப்பைப் போன்றதாகும் என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அனஸ் இப்னு மாலிக்(ரலி) அறிவிக்கிறார்கள். புகாரி 3770.

ஆயிஷா (ரலி) நோயுற்றார்கள். அப்போது இப்னு அப்பாஸ் (ரலி) (நலம் விசாரிக்க) வந்து, 'இறை நம்பிக்கையாளர்களின் அன்னையே! வாய்மையில் முந்தியவர்களான அல்லாஹ்வின் தூதரும் அபூ பக்ரும் காத்திருக்கும் இடத்திற்கு (சொர்க்கத்திற்கு) நீங்கள் செல்லவிருக்கிறீர்கள்'' என்று (ஆறுதல்) கூறினார்கள் என காசிம் இப்னு முஹம்மத்(ரஹ்) அறிவிக்கிறார்கள் புகாரி 3771.

விரிவஞ்சி இத்துடன் சுவர்க்கம் குறித்து தனித்து நற்செய்தி சொல்லப்பட்ட நபித்தோழர்களின் தகவல்களை சுருக்கிக் கொள்கிறோம்.

## பத்து நபித்தோழர்களைக் குறித்து:

அபூபக்கர் சொர்க்கத்தில் இருப்பார், உமர் சொர்க்கத்தில் இருப்பார், உஸ்மான் சொர்க்கத்தில் இருப்பார், அலீ சொர்க்கத்தில் இருப்பார், தல்ஹா சொர்க்கத்தில் இருப்பார், ஜுபைர் சொர்க்கத்தில் இருப்பார், அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ஃப் சொர்க்கத்தில் இருப்பார், ஸஅத் சொர்க்கத்தில் இருப்பார், ஸஈத் சொர்க்கத்தில் இருப்பார், அபூ உபைதா இப்னுல் ஜர்ராஹ் சொர்க்கத்தில் இருப்பார் என்று நபி (ஸல்)அவர்கள் கூறியருக்கிறார்கள். அஹ்மத், திர்மிதீ.

அபூபக்கர், உமர், உஸ்மான், அலீ, ஸஈத், தல்ஹா, ஜுபைர், ஸஅத், அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ஃப், ஸஈத் இப்னு ஸைத் ஆகியோர் அல்லாஹ்வின் தூதரின் பார்வையில் ஒரே தரமானவர்கள். போர்க்களத்தில் அல்லாஹ்வின் தூதருக்கு முன்னால் நின்று போரிடுவார்கள்.பள்ளிவாசலில் அல்லாஹ்வின் தூதருக்குப் பின்னால் நின்று தொழுவார்கள். முஹாஜிரீன்களிலும் அன்சாரிகளிலும் இருப்போர் இறந்தோர் அனைவரிலும் இவர்களுக்கு நிகராக எவரும் கிடையாது என்று ஸஈத் இப்னு ஜுபைர் (ரலி) சொல்கிறார்கள். தாரீக் திமிஷ்க்.

## பத்ருப் போரில் கலந்து கொண்ட அனைவரும் சொர்க்கவாசிகளே

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் குதிரை வீரர்களான என்னையும், அபூ மர்ஸத் அவர்களையும், ஸுபைர் இப்னு அவ்வாம் அவர்களையும், 'நீங்கள் 'ரவ்ளத்து காக்' என்னுமிடம் வரை செல்லுங்கள் ஏனெனில், அங்கு (ஒட்டகச் சிவிகையில் இணைவைப்பவர்களில் ஒருத்தி இருக்கிறாள். இணைவைப்பவர்(களின் தலைவர்)களுக்கு ஹாதிப் இப்னு அபீ பல்தஆ அனுப்பியுள்ள (நம்முடைய ரகசியத் திட்டங்களைத் தெரிவிக்கும்) கடிதம் ஒன்று அவளிடம் இருக்கும் (அவளிடமிருந்து கடிதத்தைக் கைப்பற்றி வாருங்கள்)'' என்று கூறினார்கள். (பிறகு நாங்கள் புறப்பட்டுப்போனோம்.) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் அந்தப் பெண் தன்னுடைய ஒட்டகத்தில் சென்று கொண்டிருக்க, அவளை நாங்கள் அடைந்தோம்.அவளிடம், 'கடிதம் (எங்கே? அதை எடு)என்று கேட்டோம். அவள், 'எம்மிடம் கடிதம் எதுவுமில்லை என்று பதிலளித்தாள். (அவள் அமர்ந்திருந்த) ஒட்டகத்தை நாங்கள் படுக்க வைத்து (அந்தக் கடிதத்தைத்) தேடினோம். எந்தக் கடிதத்தையும் நாங்கள் காணவில்லை. அப்போது, 'இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பொய் சொல்லமாட்டார்கள்.ஒன்று, நீயாக கடிதத்தை எடு(த்துக் கொடு); அல்லது உன்னை(ச் சோதிப்பதற்காக உன்னுடைய ஆடையை) நாங்கள் கழற்ற வேண்டியிருக்கும்'' என்று நாங்கள் சொன்னோம். விடாப் பிடியாக (நாங்கள்) இருப்பதை அவள் கண்டபோது, (கூந்தல் நீண்டு தொங்கும்) தன்னுடைய இடுப்புப் பகுதிக்கு அவள் கையைக் கொண்டு சென்றாள்.அவள் ஒரு துணியை இடுப்பில் கட்டியிருந்தாள். (அங்கிருந்து) அ(ந்தக் கடிதத்)தை வெளியில் எடுத்தாள். அந்தக் கடிதத்துடன் இறைத்தூதர்(ஸல்) அவர்களை நோக்கி நடந்தோம். அப்போது உமர் (ரலி), 'இறைத்தூதர் அவர்களே! அவர் (ஹாதிப் இப்னு அபீ பல்தஆ) அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும், இறை நம்பிக்கையாளர்களுக்கும் துரோகமிழைத்துவிட்டார். என்னை விடுங்கள் அவரின் கழுத்தைக் கொய்துவிடுகிறேன்'' என்று கூறினார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் (ஹாதிப் அவர்களை நோக்கி), 'ஏன் இப்படிச் செய்தீர்கள்!'' என்று கேட்டார்கள்.

'அல்லாஹ்வின் மீதாணையாக! அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் விசுவாசமில்லாதவனாக நடந்து கொள்ள வேண்டுமென்பது என் நோக்கமல்ல. இணைவைப்பாளர்(களுக்கு நான் செய்யும் இந்த உதவியால் அவர்)களிடம் எனக்கு ஒரு செல்வாக்குக் கிடைத்து, அதன் மூலம் அல்லாஹ்(மக்காவிலிருக்கும்) என் மனைவி மக்களையும், என் செல்வத்தையும் பாதுகாக்கவேண்டும் என்றே நான் நினைத்தேன்.

தங்கள் தோழர்கள் அனைவருக்குமே மக்காவில் அவர்களின் மனைவி மக்களையும், அவர்களின் செல்வத்தையும் எவரின் மூலமாக அல்லாஹ் பாதுகாப்பானோ அத்தகைய உறவினர்கள் இருக்கின்றனர்'' என்று கூறினார். (இதைக் கேட்ட) நபி (ஸல்) அவர்கள், 'இவர் உண்மை கூறினார். இவரைப் பற்றி நல்லதையே சொல்லுங்கள்'' என்று (தோழர்களைப் பார்த்துக்) கூறினார்கள். அப்போது உமர் (ரலி), 'இவர் அல்லஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும், இறைநம்பிக்கையாளர்களுக்கும் துரோகமிழைத்து விட்டார். என்னை விடுங்கள் இவரின் கழுத்தைக் கொய்து விடுகிறேன்'' என்று (மீண்டும்) கூறினார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள், 'இவர் பத்ருப் போரில் பங்கெடுத்தவர் அல்லவா? **பத்ரில் பங்கெடுத்தவர்களை நோக்கி அல்லாஹ், 'நீங்கள் விரும்பியதைச் செய்யுங்கள்.உங்களுக்கு சொர்க்கம் உறுதியாகிவிட்டது'... அல்லது 'உங்கள் பாவங்களை நான் மன்னித்து விட்டேன்'...** என்று கூறி விட்டிருக்கலாம் அல்லவா?' என்று கூறினார்கள் இதைக் கேட்ட உமர் (ரலி) தம் கண்கள் கண்ணீர் உகுத்துக் கொண்டிருக்க,'அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கறிந்தவர்கள்'' என்று கூறினார்கள். அலீ(பின் அபீ தாலிப் (ரலி) அவர்கள் அறிவித்தார். புகாரி 3983.

## பைஅத்துர் ரிழ்வானில் கலந்து கொண்ட அனைவரும் சொர்க்கவாசிகளே.

ஹிஜ்ரி ஆறாம் ஆண்டு உம்றா செய்யும் எண்ணத்துடன் நபியும் நபித்தோழர்களும் மக்காவிற்கு செல்ல வழியில் ஹுதையிப்பா என்ற இடத்தில் மக்காவாசிகளால் தடுக்கப்பட நாங்கள் உம்றா செய்யவே வந்திருக்கிறோம் மாறாக போர் செய்ய அல்ல என்பதை எடுத்துக் காட்ட உஸ்மான் (ரலி)அவர்களை மக்காவிற்கு நபியவர்கள் அனுப்புகிறார்கள்.அங்கே உஸ்மான் கொல்லப்பட்டு விட்டார் என்ற வதந்தியால் உஸ்மான் கொலைக்கு பழிக்குப்பழி வாங்கவேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் நபித்தோழர்களிடம் ஒரு மரத்தின் அடியில் உடன்படிக்கை வாங்குகிறார்கள்.

மரத்தின் கீழ் நின்று பைஅத் செய்த எவரும் நரகில் நுழைய மாட்டார் என நபியவர்கள் கூறியதாக ஜாஃபர்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத்.

## நான்கு கலீஃபாக்களைக் குறித்து:

...எனது வழிமுறையையும் நேர்வழி பெற்ற கலீஃபாக்களின் வழிமுறையையும் பற்றிப்படித்துக் கொள்ளுங்கள்...
திர்மிதீ, அஹ்மத், தாரிமீ, அபூதாவூத், இப்னு மாஜா.

கலீ∴பாக்களின் வழிமுறையை பற்றிப்பிடித்தல் என்றால் நபியவர்களின் வழிமுறையை பற்றிப்பிடித்தல் என்பதாகும். ஏனெனில் கலீ∴பாக்களின் வழி நபியவர்களின் வழியே தவிர அவர்கள் வேறு வழிமுறையை பின்பற்றியதில்லை.

## அனைத்து நபித்தோழர்களும் சுவர்க்கம் செல்வர்:

யூதக் கிறிஸ்தவர்கள் எழுபத்தி இரண்டு பிரிவினராகப் பிரிந்தனர் என் சமுதாயம் எழுபத்து மூன்று பிரிவினராகப் பிரியும். அவர்களில் ஒரு கூட்டத்தினரைத் தவிர மற்றைய கூட்டத்தினர் அனைவரும் நரகம் செல்வார்கள் என்று நபி (ஸல்) கூறினார்கள். அப்போது நபித்தோழர்கள் அந்த (சொர்க்கம் செல்லும்)ஒரு கூட்டம் யார்? என்று வினவ நானும் என்னுடைய தோழர்களும் எந்த வழியில் இருக்கிறோமோ அந்த வழியில் இருப்போர் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். திர்மிதீ

இந்த நபிமொழியில் நான் எந்த வழியில் இருக்கிறேனோ அந்த என் வழியில் இருப்பவர்கள் என்று நபியவர்கள் சொல்லவில்லை மாறாக நானும் என் தோழர்களும் இருக்கிற வழி என்று தன்னோடு நபித்தோழர்களையும் இணைத்துச் சொல்லியருக்கிறார்கள் மேலும் நபி மற்றும் நபித்தோழர்களின் வழியில் நாமும் நடந்தால் அவர்கள் எவ்வாறு சுவர்க்கத்திற்குரியவர்களோ அது போல் நாமும் சுவர்க்கத்திற்குரியவர்களாக ஆகிவிடுவோம் இன்ஷா அல்லாஹ்.

## சமுதாயத்தின் பாதுகாப்பு:

வானத்திற்கு நட்சத்திரங்கள் பாதுகாப்பு,நட்சத்திரங்கள் அகன்று விட்டால் வானத்திற்கு வாக்களிக்கப் பட்டது வந்துவிடும், நானோ என் தோழர்களுக்கு பாதுகாப்பு,நான் சென்று (இறந்து) விட்டால் என் தோழர்களுக்கு வாக்களிக்கப்பட்டது வந்துவிடும், என் தோழர்களோ என் சமுதாயத்திற்கு பாதுகாப்பு,என் தோழர்கள் சென்று விட்டால் என் சமுதாயத்திற்கு வாக்களிக்கப்பட்டது வந்துவிடும் என்று நபி (ஸல்)அவர்கள் கூற அபூமூஸா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். நூல்:முஸ்லிம்.

## போர்களில் வெற்றி:

மக்களிடத்தில் ஒரு காலம் வரும்,அப்போது அவர்கள் (எதிரிகளுடன்) போரிடுவார்கள், அப்போது அவர்களிடம் கேட்கப்படும்" உங்களில் நபியை பார்த்தவர் எவரேனும் உண்டா என்று? அதற்கவர்கள் ஆம் (உண்டு) என்று கூறுவார்கள், அவர்களுக்கு போரில் வெற்றியளிக்கப்படும். பிறகும் அவர்கள் போரிடுவார்கள், அப்போது அவர்களிடம் கேட்கப்படும்" உங்களில் நபியோடு தோழமை கொண்டவர்களை (நபித்தோழர்களை)

பார்த்தவர் எவரேனும் உண்டா என்று? அதற்கவர்கள் ஆம் (உண்டு) என்று கூறுவார்கள், அவர்களுக்கு போரில் வெற்றியளிக்கப்படும். பிறகும் அவர்கள் போரிடுவார்கள், அப்போது அவர்களிடம் கேட்கப்படும்" உங்களில் நபியோடு தோழமை கொண்டவரோடு தோழமை கொண்டவரை பார்த்தவர் எவரேனும் உண்டா என்று? அதற்கவர்கள் ஆம் (உண்டு) என்று கூறுவார்கள், அவர்களுக்கு போரில் வெற்றியளிக்கப்படும். நூற்கள்: முஸ்லிம், முஸ்னத் அஹ்மத்

### எதனால் நன்மை:

என்னையும் என்னோடு தோழமை கொண்ட என் தோழர்களையும் பார்த்தவர் உங்களில் இருக்கும் காலமெல்லாம் நீங்கள் நன்மையிலேயே இருக்கிறீர்கள், மேலும் அல்லாஹ்வின் மீது சத்தியமாக என்னையும் என்னோடு தோழமை கொண்ட என் தோழர்களையும் பார்த்தவரை பார்த்தவர் உங்களில் இருக்கும் காலமெல்லாம் நீங்கள் நன்மையிலேயே இருக்கிறீர்கள், மேலும் அல்லாஹ்வின் மீது சத்தியமாக என்னையும் என்னோடு தோழமை கொண்ட என் தோழர்களையும், பார்த்தவரை, பார்த்தவரையும் பார்த்தவர் உங்களில் இருக்கும் காலமெல்லாம் நீங்கள் நன்மையிலேயே இருக்கிறீர்கள்.

நூற்கள்: அல் மு ஃ ஜமுல் கபீர் லித்தப்ரானி,முஸன்ன ஃப் இப்னி அபீஷைபா

### அறிஞர்களின் கருத்துக்கள்:

முஹம்மது அவர்களின் தோழர்களைத் திட்டாதீர்கள், அவர்களில் ஒருவர் ஒரு மணி நேரம் நின்று வணங்கியது, உங்களில் ஒருவர் ஆயுள் முழுவதும் செய்கிற அமல்களை விடச் சிறந்ததாகும் என இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். நூல்:முஸன்ன ஃப் இப்னி அபீஷைபா.

முஹம்மதின் தோழர்களின் தவறுகளை கூறிக் கொண்டிருக்கிற மனிதனை நான் கண்டால் அவனுடைய இஸ்லாத்தின் மீது நான் சந்தேகம் கொள்வேன் என இமாம் அஹ்மத் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். - நூல்: ஷரஹ் உஸூலுல் இ ஃதிகாத்

அவர்களின் தவறுகளில் எதையும் கூறுவது யாருக்கும் கூடாது, அவர்களில் எவர் ஒருவர் மீதும் குற்றம், குறை சொல்லவும் கூடாது,அப்படி எவனாவது செய்தால் அவனை அதிகாரத்தில் இருப்பவர் கண்டிக்க வேண்டும், தண்டிக்கவும் வேண்டும், அவனை விட்டுவிடக் கூடாது,மாறாக அவனை தண்டிக்கவேண்டும்,அவனை தவ்பா செய்யவைக்க வேண்டும், தவ்பா செய்தால் ஏற்றுக் கொள்ளவேண்டும், மீண்டும் அந்த

தவறை செய்தால் மரணம் வரும் வரை அல்லது திருந்தும் வரை அவனை சிறை பிடிக்கவேண்டும் என இமாம் அஹ்மத் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். நூல்: அஸ்ஸாரிமில் மஸ்லூல்

முஹம்மதின் தோழர்களை நாங்கள் நேசிக்கிறோம், அவர்களின் நேசத்தில் வறம்பு மீற மாட்டோம், அவர்களை விட்டும் விலக மாட்டோம், அவர்களை எவன் வெறுப்பானோ, தக்க காரணமின்றி அவர்களின் குறைகளை கூறுகிறானோ அவனை நாங்கள் வெறுப்போம், அவர்கள் விஷயத்தில் நலவைத் தவிர வேறெதையும் கூறமாட்டோம், அவர்களை நேசிப்பது மார்க்கமும், ஈமானும், இஹ்ஸானுமாகும், அவர்களை வெறுப்பது குஃப்ரும், நயவஞ்சகத்தனமும் வழிகேடுமாகும் என தஹாவி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். - நூல்:ஷரஹ் அகீததுத் தஹாவிய்யா

எவனொருவன் முஹம்மதின் தோழர்கள் மீது உள்ளத்தில் காழ்ப்புணர்ச்சி கொள்கிறானோ அவனுக்கு முஸீபத்து ஏற்பட்டுவிட்டது என இமாம் மாலிக்(ரஹ்)அவர்கள் கூறுகிறார்கள்.

இமாம் மாலிக் (ரஹ்) கருத்தை அங்கீகரித்து இமாம் குர்துபீ (ரஹ்) பின்வருமாறு கூறுகிறார்கள்:
மாலிக் அழகான கருத்தை சொல்லியிருக்கிறார்கள், எவனொருவன் நபித்தோழர்களில் யாராவது ஒருவரிடத்தில் குறை கண்டாலோ அல்லது அவர்களின் அறிவிப்பில் குறை கண்டாலோ அவன் அல்லாஹ்வின் சட்டத்தை நிராகரித்து விட்டான் மேலும் முஸ்லிம்களின் மார்க்கத்தை பாத்திலாக்கிவிட்டான் என்றும்...

நபித்தோழர்கள் அனைவரும் நீதமானவர்கள், அல்லாஹ்வின் நேசர்கள்... நபிமார்கள், ரசூல்மார்களுக்குப் பிறகு இறைவனின் படைப்புகளில் இவர்களே சிறந்தவர்கள் என்று இமாம் குர்துபீ (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள். (அல்ஜாமிவு லிஅஹ்காமில் குர்ஆன்) முஹாஜிர்கள், அன்சாரிகள், பிறகு ஹிஜ்ரத் செய்து வந்தவர்கள் இவர்கள் முன்சென்றோருக்கு பாவமன்னிப்பு தேடுவார்கள், இவர்களின் உள்ளங்களில் எத்தகைய காழ்ப்பும் இல்லை என்று இம்மூன்று வகையினரின் புகழ்ச்சியை சூரா ஹஷ்ர் 8,9,10 ஆகிய வசனங்கள் உள்ளடக்கியிருக்கிறது. இம்மூன்று வகையினரை விட்டும் ஷீஆக்களின் ஒரு பிரிவான ராஃபிழாக்கள் வெளியேறிவிட்டனர் என்றும் இவர்கள் முந்தியவர்களுக்கு பாவமன்னிப்பு தேடமாட்டார்கள் என்றும் அவர்களின் உள்ளங்களில்

நபித்தோழர்களைக் குறித்து காழ்ப்புணர்ச்சி ஏற்பட்டுவிட்டது என்றும்... இமாம் இப்னு தைமிய்யா (ரஹ்)அவர்கள் குறிப்பிடுகிறார்கள். (மின்ஹாஜுஸ்ஸுன்னா பாகம்2)

அபூ ஸஹ்ர் ஹுமைத் இப்னு ஜியாதா அவர்கள் கூறுகிறார்கள்:
நான் முஹம்மத் இப்னுல் குரழி அவர்களிடம் வந்து முஹம்மதின் தோழர்களைக் குறித்து உங்களின் கருத்து என்ன?என்று கேட்டேன்.அதற்கவர்கள் முஹம்மதின் தோழர்கள் அனைவரும் அவர்களில் நல்லவர்களும் அவர்களில் ஒரு சில தவறான காரியங்கள் செய்தவர்களும் சொர்க்கவாசிகளே என்றார்கள்.நான் கேட்டேன் எதை வைத்து இவ்வாறு கூறுகிறீர்கள் என்று? அதற்கவர்கள்
“இன்னும் முஹாஜிர்களிலும் அன்ஸார்களிலும் முதலாவதாக (ஈமான்கொள்வதில்) முந்திக் கொண்டவர்களும் அவர்களை (எல்லா) நற்கருமங்களிலும் பின்தொடர்ந்தவர்களும் இருக்கின்றார்களே அவர்கள் மீது அல்லாஹ் திருப்தி அடைகிறான், அவர்களும் அவனிடம் திருப்தியடைகின்றார்கள், அன்றியும் அவர்களுக்காக சுவனபதிகளைச் சித்தப்படுத்தியிருக்கின்றான், அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். அவர்கள் அங்கே என்றென்றும் தங்கியிருப்பார்கள் - இதுவே மகத்தான வெற்றியாகும்” 9:100 ஆவது வசனத்தை மேற்கோள் காட்டி இந்த அல்லாஹ்வின் வசனத்தை ஓதிக்கொள் என்றார்கள். த..ஃப்ஸீர் அல்பகவீ பாகம் 2

திருமறைக்குர்ஆனில் கூறப்பட்ட இறையச்சமுடையோர், இறைநம்பிக்கை கொண்டோர், அழகாக நன்மை செய்வோர், இதல்லாத வேறு புகழ்ச்சிகள் கொண்டு புகழப்பட்டோர் இந்த சமுதாயத்தில் முதலில் வந்த,முதல் சிறப்பிற்குரியோர் நபித்தோழர்களே என்று ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹ்)அவர்கள் கூறுகிறார்கள். மின்ஹாஜுஸ் ஸுன்னா பாகம் 2 .

நபிமார்களுக்குப் பிறகு அல்லாஹ்வின் நேசர்களான, மூ..ஃமின்களில் சிறந்தவர்களான நபித்தோழர்களைக் குறித்து உள்ளத்தில் எவன் காழ்ப்புணர்ச்சி கொள்கிறானோ அவனை விட வழிகெட்டவன் யார்? என்றும் யூதர்களும் கிறிஸ்தவர்களும் தங்களின் நபிமார்களின் தோழர்களை கண்ணியப்படுத்தி இருக்கின்றார்கள்; யூதர்களிடம் கேட்கப்பட்டது உங்களின் மார்க்கத்தில் சிறந்தோர் யார் என்று? அதற்கவர்கள் மூஸாவின் தோழர்கள் என்று பதிலளித்தனர்.கிறிஸ்தவர்களிடம் கேட்கப்பட்டது உங்களின் மார்க்கத்தில் சிறந்தோர் யார் என்று? அதற்கவர்கள் ஈஸாவின் தோழர்கள் என்று பதிலளித்தனர். ஷியாக்களின் ஒரு பிரிவான ரா..ஃபிழாக்களிடம் கேட்கப்பட்டது.

உங்களின் மார்க்கத்தில் ஆகக் கெட்டவர்கள் யார் என்று?அதற்கவர்கள் ஒரு சிலர் தவிர முஹம்மதின் ஒட்டு மொத்த தோழர்கள் என்று பதிலளித்தனர் என்று இமாம் இப்னுல் அபி இஜ் அல் ஹனஃபி (ரஹ்)அவர்கள் கூறுகிறார்கள். ஷரஹ் அத்தஹாவிய்யா.
எவன் முஹம்மதின் தோழர்கள் விஷயத்தில் குறை காண்கிறானோ அவன் இஸ்லாத்தை எதிர்க்கிற நாத்திகவாதியாவான்,அவன் பாவமன்னிப்பு கேட்காவிட்டால் அவனுக்கு மருந்து(தண்டனை) வாள் (கொலை)தான் என ஸர்ஹஸீ (ரஹ்)அவர்கள் கூறுகிறார்கள்.நூல்:உஸூலுஸ் ஸர்ஹஸீ
முஹம்மதின் தோழர்களை எவன் திட்டுகிறானோ அவன் தொழுதாலும் நோன்பு வைத்தாலும் தன்னை முஸ்லிம்களில் ஒருவன் என்று கருதிக் கொண்டாலும் அவன் காஃபிர் தான் என பிஷ்ர் இப்னுல் ஹாரிஸ் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள். நூல்: அல் இபானா இதல்லாமல் இன்னும் பல சிறப்புகள் இருக்கின்றன. இத்துடன் சுருக்கிக் கொள்கிறோம்.

அப்படிப் பல நற்குணங்களுக்குச் சொந்தக்காரர்களாக விளங்கிய, நபியவர்களின் கண் அசைவைக் கூட கண்டுபிடித்து முற்றிலும் கட்டுப்பட்டு நடந்த, இஸ்லாத்திற்காகவும் நபி (ஸல்)அவர்களுக்காகவும் தங்களையே அர்ப்பணித்த நபித்தோழர்களை தங்களின் வாய்க்கு வந்தாற்போல சகட்டுமேனிக்கு, விமர்ச்சிக்கிறோம் என்ற பெயரில் திட்டுகிற ஒரு நிலை, இஸ்லாமியக் கொள்கையை நாம் தான் சரியாக மக்களுக்கு போதிப்பதாக கூறிக்கொண்டிருக்கிற சகோதரர்களுக்கு மத்தியில் காணப்படுவது வேதனையாகவும் வேடிக்கையாகவும் அதே நேரத்தில் கண்டிக்கத்தக்கதாகவும் இருக்கிறது.

இந்த விஷயங்களை சொல்வது அந்த சகோரர்களை விமர்ச்சிக்கவோ அல்லது அவர்களின் மனங்களை புண்படுத்தவோ அல்ல.

மாறாக நபித்தோழர்களை சிறப்புப் படுத்தி பேசும் அவர்களே கூட பல நேரங்களில் தங்களை அறிந்தோ அறியாமலோ நபித்தோழர்களின் தவறுகளை சுட்டிக் காட்டி அவர்களின் கண்ணியத்திற்கு களங்கம் கற்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் விளங்க வேண்டும் என்ற நன்னோக்கிலே தான் நாம் இந்த தகவல்களை சுட்டிக் காட்டுகிறோம்.அல்லாஹ் மிக நன்கறிந்தவன்.
அவர்களைக் குறித்து பல விஷக்கருத்துக்களை அள்ளித் தெளித்துவிட்டிருக்கிற இந்த சகோதரர்கள் சிந்திக்க அல்லாஹ் அருள்புரிவானாக.

அவற்றில் சில...

நபித்தோழர்களால் விளங்கிக் கொள்ள முடியாத பல விஷயங்கள் நமக்கு விளங்கும் என்றும், காண்டம் பயன்படுத்துவது எப்படி என்று அபூஹுரைராவிடம் கேட்டால் அவரால் கூட சொல்ல முடியாது, நம்மால் சொல்லமுடியும் என்று அசிங்கமாக விமர்ச்சிப்பதும், அவர்கள் கூட பல சந்தர்ப்பங்களில் நபிக்கு மாற்றமாக நடந்திருக்கிறார்கள் என்றும், அண்ணன் எப்போ சாவான் திண்ணை எப்போ காலியாகும் என்று பதவிக்கு ஆசைப்பட்டு காத்துக்கொண்டிருந்தார்கள் என்றும், அவர்கள் கிரிமினல்கள் என்றும், போனா போகட்டும் என்று சாப்பாடு கொடுத்தோம் உடுக்க உடை கொடுத்தோம் ஆனா ஆட்சில பங்கு கேட்டா உட்டுடுவோமா? என்று முஹாஜிர்கள் பதவிக்கு வரக்கூடாது தாங்களே பதவிக்கு வரவேண்டும் என்று அன்சாரிகள் பதவிக்கு ஆசைப்பட்டார்கள்? என்றும், உஸ்மானைக் கொன்றவர்கள் நபித்தோழர்களே என்றும், நபி (ஸல்) அவர்கள் இறந்த உடனே கொள்கை குழப்பத்தை உண்டு பண்ணியவர்கள் நபித்தோழர்களே என்றும்,நபித்தோழர்களுக்கு பைத்தியம் பிடித்தது, பழைய கிறுக்கு பிடித்தது என்றும், நபித்தோழர்களில் சிலர் எடுப்பார் கைப்பிள்ளைகளாக இருந்தார்கள் என்றும், நபியின் மறைவிற்கு பிறகு ஜக்காத் வழங்கமாட்டோம் என்றும், ஜக்காத் வழங்காமலிருப்பதற்கு குர்ஆனின் வசனங்களைத் தங்களுக்கு சாதகமாக வளைக்கமுடியுமா? என்று யோசித்தவர்கள் என்றும், இஸ்லாமிய கொள்கைக்காக பல அர்ப்பணிப்புகளை, தியாகங்களை செய்தவர்கள் காசு என்று வந்தவுடன் மாறிவிட்டார்கள் என்றும், அப்பொழுது பல நபித்தோழர்கள் தங்களின் பழைய ஜாஹிலிய்யாக் கொள்கைக்கு திரும்பிவிட்டார்கள் என்றும்,அவர்கள் தான் மார்க்கத்தில் பல பித்அத்களை உண்டு பண்ணினார்கள் என்றும், உங்களில் ஒருவருக்கொருவர் சண்டையிட்டு கா.ஃபிர்களாக மாறிவிடாதீர்கள் என்ற ஹதீஸையும் பொருட்படுத்தாமல் அவர்கள் தங்களுக்குள்ளே சண்டையிட்டு போரிட்டு (கா.ஃபிர்களாக மாறி)விட்டார்கள் என்று கேட்போர் தவறாக விளங்கும் வண்ணம் ஒரு மாயையை ஏற்படுத்தி, நாம் கூட அவ்வாறு சண்டையிட்டுக் கொள்ளவில்லை அதனால் இந்த விஷயத்தில் நாம் அவர்களை விட ஒரு படி மேல்தான் என்றும்... இப்படி பலவாறாக விமர்ச்சிக்கிறீர்களே தங்களின் தலைவரிடத்திலோ அல்லது தங்களின் தாயிகளிடத்திலோ தவறுகள் இருக்கிறது தாங்கள் தவறில் இருக்கிறீர்கள் என்று சொன்னால் மூக்கிற்கு மேல் கோபம் வருகிறது.வாதத்திற்கு வருகிறீர்களா? என்று கோபத்தோடு ஏன் நடந்து கொள்ளவேண்டும், உங்களை நாங்கள் விமர்ச்சிக்கக் கூடாது ஆனால் உத்தம

நபித்தோழர்களை வாய்க்கு வந்தபடியெல்லாம் விமர்ச்சிப்பீர்கள் என்றால் எவ்வாறு ஏற்றுக் கொள்ளமுடியும்?

இப்படி உத்தம நபித் தோழர்களின் தவறுகளை சுட்டிக் காட்டுகிறோம் என்ற போர்வையில் அவர்களின் கண்ணியத்திற்கு பங்கம் ஏற்படுத்துகிற அளவிற்கு எல்லை மீறிச் சென்றிருக்கிறார்கள் இந்த சகோதரர்கள்.
மீ
ண்டும் ஒரு முறை அந்த சகோதரர்கள், நபித்தோழர்களின் தவறுகளில் தங்களின் பழைய நிலைபாட்டை சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
“அதாவது நபித்தோழர்களின் தவறுகளை எடுத்து சுட்டிக் காட்ட நாம் யார்?அதற்கு நமக்கு என்ன தகுதி இருக்கிறது” என்பது தான் அவர்களின் பழைய நிலைபாடு.
எனவே அல்லாஹ்வாலும் நபி (ஸல்) அவர்களாலும் இந்தளவிற்கு நபித்தோழர்கள் கண்ணியப்படுத்தப்படக் காரணமென்ன?

நபித்தோழர்கள்; அல்லாஹ்வின் கட்டளைகளுக்கும் நபி (ஸல்)அவர்களின் கட்டளைகளுக்கும் தங்களின் மனங்களில் எவ்வித மாற்றுக் கருத்தும் கொள்ளாமல் அப்படியே கட்டுப்பட்டு நடந்தார்கள் என்கிற ஒரே காரணத்திற்காகத் தான் அவர்கள் அல்லாஹ்வால் குர்ஆனிலும் நபியவர்களால் பல நபிமொழிகளிலும் பலவாறாகப் சிறப்பித்துக் கூறப்பட்டிருக்கிறார்கள்.
அவர்கள் எவ்வாறெல்லாம் கட்டுப்பட்டு நடந்தார்கள் என்பதை இனிவரும் காலங்களில் பார்ப்போம் இன்ஷா அல்லாஹ்

இது வரை நாம் நபித் தோழர்களைக் குறித்து அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் எவ்வாறெல்லாம் கண்ணியப்படுத்தி, சிறப்பித்துக் கூறினார்கள் என்பதை சுருக்கமாகப் பார்த்தோம்.

இந்த தொடரில் நபி (ஸல்) அவர்களுக்கும் அவர்களின் ஏவல்,விலக்கல்களுக்கும் நபித்தோழர்கள் எவ்வாறு கட்டுப்பட்டார்கள் என்பதை பார்ப்பதற்கு முன்னால் (இறைக் கட்டளைகளுக்கு)அதாவது அல்லாஹ்வின் வசனங்களுக்கு எவ்வாறு கட்டுப்பட்டார்கள்?அந்த இறை வசனங்களை எவ்வாறு தங்களின் வாழ்வியல் நெறியாக கடைபிடித்தார்கள்? அந்த இறைவசனங்களுக்கு முன்னால் எவ்வாறு பணிந்தார்கள்? என்பதை முதலில் பார்க்கலாம் இன்ஷா அல்லாஹ்...

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் நபியாக அனுப்பப்படுவதற்கு முன்னால் அறியாமைக் கால கட்டத்தில் இன்று நாம் யாரை நபியின் தோழர்கள் என்கிறோமோ யாரை அல்லாஹ் பொருந்திக் கொண்டான் என்கிறோமோ யாரை அல்லாஹ் சிறப்பித்து கண்ணியப்படுத்திக் கூறுகிறான் என்கிறோமோ யாரை அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் சொர்க்கத்திற்குரியோர் என்று சொன்னார்களோ அவர்களில் சிலரைத் தவிர மற்றையோர் அறியாமை இருட்டில் இருந்தவர்கள் தான்.

படைத்தவனை மறந்து படைப்புகளை கடவுள் என்றாக்கி அந்தப் படைப்புகளுக்கு பல படையல்களை படைத்து வணங்கிவந்தவர்கள், அநாகரிமான காரியங்கள் என்னென்ன வெல்லாம் இருக்கிறதோ அவைகளே நாகரிகம் எனக் கருதி செயல்பட்டு வந்தவர்கள், மதுவிலும் மாதுவிலும் சூதாட்டத்திலும் திளைத்தவர்கள், சிசுக்கொலையை முன்னின்று நடத்தியவர்கள், அடுத்தவர்களின் பொருளாதாரத்தை அநியாயமான முறையில் அனுபவித்து வந்தவர்கள், குலப்பெருமை பேசியவர்கள், மேலும் பற்பல தீமைகளை செய்துவந்தவர்கள் அப்படிப்பட்டவர்களின் உள்ளங்களில் இறை வசனங்கள் ஊடுறுவி அவைகளைத் தட்ட அப்படியே தங்களின் அறியாமைக் கொள்கைகள் அனைத்தையும் விட்டொழித்து ஏகத்துவக் கலிமாவை மொழிந்து இஸ்லாத்தை ஏற்று இறையன்பை பெற்று இறைவனின் திருப்தியை பெற்று சுவர்க்கச் சான்றைப் பெற்றார்கள்.
அதற்கு அடிப்படை திருமறைக்குர்ஆன் வசனங்களே.அவர்கள் குர்ஆனோடு எப்படி தொடர்பு கொண்டிருந்தார்கள்?அவ்விறை வசனங்கள் அவர்களை எவ்வாறு மாற்றியது? என்பதற்கான சான்றுகளை நாம் கவனமாக உற்று நோக்கவேண்டும்.

நாங்கள் நபியவர்களிடமிருந்து (குர்ஆனில்) பத்து வசனங்களை கற்றுக் கொள்வோம்.அந்த பத்து வசனங்களில் உள்ள கருத்துக்களை விளங்கி செயல்படுத்தாமல் அடுத்த வசனங்களுக்கு செல்லமாட்டோம் என அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி)அறிவிக்கிறார்கள்.நூற்கள்:முஸ்னத் இப்னி அபீஷைபா, பைஹகீ, ஹாகிம், முஷ்கிலுல் ஆஸார் லித்தஹாவி.

இது அவர்கள் குர்ஆனோடு எந்தளவிற்கு தொடர்பு வைத்திருந்தார்கள் என்பதையும் அவற்றில் உள்ள கருத்துக்களை விளங்கி எவ்வாறு நடைமுறைப்படுத்தினார்கள்

என்பதையும் அந்த திருமறை வசனங்கள் அவர்களை எவ்வாறு மாற்றியது என்பதையும் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகிற சான்றாகும்.
இன்னும் ஒரு படி மேலே சொல்வதாக இருந்தால் குர்ஆனில் அல்லாஹ்வின் கட்டளை எதுவோ அதுவே தங்களின் இலக்காக கடைபிடித்து வாழ்ந்திருக்கிறார்கள்.மேலும் குர்ஆன் வசனங்கள் அவர்கள் முன் ஓதிக்காட்டப்பட்டால் என்றைக்குமே அவற்றிற்கு மாற்றமாக அவர்கள் நடந்தது கிடையாது.உடனே அவ்விறை வசனங்களுக்கு உடனே கட்டுப்பட்டுவிடுவார்கள்.
பின்வரும் ஆதாரங்கள் அவற்றிற்கு எடுத்துக் காட்டுகளாக இருக்கின்றன.

## கிப்லா மாற்றத்தில் நபித் தோழர்களின் நிலை:

பைத்துல் முகத்தஸை நோக்கி தொழுது வந்தவர்களை நபியவர்களின் ஆசைக்கிணங்க மக்காவை நோக்கி தொழும்படி அல்லாஹ் கட்டளை பிறப்பிக்க தொழுது கொண்டிருந்த நபித்தோழர்கள் அப்படியே க.்பாவை நோக்கி திரும்புகிறார்கள். இது அல்லாஹ்வின் கட்டளைக்கு உடனே கட்டுப்பட்ட நிகழ்வைக் காட்டுகிறது.

நபி (ஸல்) அவர்கள் (ஜெரூசலத்திலுள்ள) பைத்துல் மக்திஸை நோக்கிப் 'பதினாறு மாதங்கள்' அல்லது 'பதினேழு மாதங்கள்' தொழுதார்கள். (மக்காவிலுள்ள) இறையில்லம் கஅபாவே தாம் முன்னோக்கும் திசையாக இருக்கவேண்டும் என்பதே அவர்களின் விருப்பமாக இருந்தது. (எனவே, தொழுகையில் கஅபாவையே முன்னோக்கும் படி ஆணையிட்டு அல்லாஹ் 02:144வது வசனத்தை அருளினான். உடனே, அவர்கள் அஸ்ருத் தொழுகையை (கஅபாவை முன்னோக்கித்)தொழுதார்கள். அவர்களுடன் மக்கள் சிலரும் தொழுதனர். பிறகு அவர்களுடன் தொழுதிருந்தவர்களில் ஒருவர் புறப்பட்டு, (மற்றொரு) பள்ளிவாசலில் (தொழுதுகொண்டு) இருந்தவர்களைக் கடந்து சென்றார். அப்போது அங்கிருந்தவர்கள் 'ருகூஉ' செய்து கொண்டிருந்தனர். அவர், 'அல்லாஹ்வை முன்வைத்து நான் சொல்கிறேன். நான், நபி (ஸல்) அவர்களுடன் சேர்ந்து மக்கா(விலுள்ள கஅபா)வை நோக்கித் தொழுதேன்'' என்று சொல்ல, அவர்கள் அப்படியே (தொழுகையில் ருகூவிலிருந்தபடியே சுற்றி) கஅபாவை நோக்கித் திரும்பிக்கொண்டார்கள்... பராஉ இப்னு ஆஸிப்(ரலி) அறிவித்தார் புகாரி: 4486.

மக்கள் குபாவில் 'சுப்ஹு'த் தொழுகையில் இருந்தபோது அவர்களிடம் ஒருவர் வந்து,'சென்ற இரவு இறைத்தூதர்(ஸல்) அவர்களுக்குக் குர்ஆன் (வசனம்

ஒன்று)அருளப்பட்டுள்ளது. (தொழுகையில் இது வரை முன்னோக்கித் வந்த பைத்துல் மக்திஸை விட்டு) இனிமேல் இறையில்லம் கஅபாவை முன்னோக்க வேண்டுமென்று அவர்களுக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது. எனவே, (மக்களே!) கஅபாவையே நீங்கள் முன்னோக்கித் தொழுங்கள்'' என்று கூறினார். அப்போது மக்களின் முகம் (பைத்துல் மக்திஸ் இருக்கும் திசையான) ஷாம் நாட்டை நோக்கியிருந்தது. (இந்த அறிவிப்பைக் கேட்ட) உடனே மக்கள் தங்கள் முகங்களை (அப்படியே) கஅபாவின் பக்கம் திருப்பிக்கொண்டார்கள்.

இப்னுஉமர் (ரலி) அறிவிக்கிறார்கள். புகாரி: 4488, 4490, 4491, 4493, 4494. முஸ்னத் அஹ்மத்: 18519, ஸுனனுல் குப்ரா லில் பைஹகீ: 2280

ஸஃபா மர்வாவிற்கிடையில் ஓடுவதை வெறுத்த நபித்தோழர்கள் பின்வரும் வசனம் அருளப்பட்டவுடன் தங்களின் பழைய நிலையை உடனே மாற்றிக் கொண்டார்கள்.

நான் ஆயிஷா(ரலி) அவர்களிடம் 'நிச்சயமாக ஸஃபா மர்வா (என்னும் மலைகள்)அல்லாஹ்வின் அடையாளங்களில் உள்ளவை. எனவே, (கஅபா என்னும்) அவ்வீட்டை ஹஜ் அல்லது உம்ராச் செய்பவர்கள் அவ்விரண்டையும் வலம் வருவது குற்றமில்லை'' என்ற (திருக்குர்ஆன் 02:158) இறைவசனப்படி, அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஸஃபா வலம் வருவது குற்றமில்லை'' என்ற (திருக்குர்ஆன் 02:158) இறைவசனப்படி, அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஸஃபா மர்வாவுக்கிடையே வலம் வராவிட்டாலும் குற்றமில்லை என்பது பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்? எனக் கேட்டேன். அதற்கு ஆயிஷா(ரலி), 'என்னுடைய சகோதரியின் மகனே! நீர் சொன்னது தவறு. அந்த வசனத்தில் அவ்விரண்டையும் வலம் வராமலிருப்பது குற்றமில்லை என்றிருந்தாலே நீர் கூறும் கருத்து வரும். ஆனால், இவ்வசனம் அன்ஸாரிகளின் விஷயத்தில் இறங்கியதாகும். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் முன் அவர்கள் வணங்கி வந்த முஷல்லல் என்னும் குன்றிலுள்ள மனாத் என்னும் சிலைக்காக இஹ்ராம் அணியும் வழக்கம் உள்ளவர்களாக இருந்தனர். எனவே, இப்போது (இஸ்லாத்தை ஏற்றபின்) அந்த ஸஃபா,மர்வாவை வலம் வருவது பாவமாகும் எனக் கருதினார்கள். எனவே, இஸ்லாத்தை அவர்கள் ஏற்றதும் நபி (ஸல்) அவர்களிடம் இது பற்றி, இறைத்தூதர் அவர்களே!நாங்கள் ஸஃபா - மர்வாவை வலம் வருவதைப் பாவமாகக் கருதுகிறோம்? எனக் கேட்டார்கள். அப்போதுதான் அல்லாஹ், 'நிச்சயமாக ஸஃபாவும் மர்வாவும் அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் உள்ளவை'' என்ற (திருக்குர்ஆன் 02:158) வசனத்தை அருளினான். மேலும் நபி (ஸல்) அவர்கள் அவ்விரண்டுக்குமிடையே

வலம் வருவதைச் செயல்படுத்திக் காட்டியுள்ளனர். எனவே, அவ்விரண்டிற்குமிடையே வலம் வருவதை விடுவதற்கு யாருக்கும் அனுமதியில்லை' எனக் கூறினார்.
உர்வாஅறிவிக்கிறார். புகாரி: 1643, 1648, 1790, 4495, 4496.
முஸ்லிம்: 3139, முஅத்தா மாலிக்: 832

## 2:245 ஆம் வசனம் இறக்கியருளப்பட்ட போது...

(கஷ்டத்திலிருப்போருக்காக) அல்லாஹ்வுக்கு அழகியக் கடன் எவர் கொடுக்கின்றாரோ அதை அவருக்கு அவன் இருமடங்காக்கிப் பன்மடங்காகச் செய்வான் - அல்லாஹ் தான் (உங்கள் செல்வத்தைச்) சுருக்குகிறான், (அவனே அதைப்) பெருக்கியும் தருகிறான், அன்றியும் நீங்கள் அவனிடமே மீட்டப்படுவீர்கள். 2:245

இந்த வசனம் இறக்கியருளப்பட்டபோது அபுத்தஹ்தாஹ் (ரலி) அவர்கள் நபி (ஸல்)அவர்களிடம், "அல்லாஹ்வின் தூதரே! எங்களிடமிருந்து அல்லாஹ் கடனை எதிர்பார்க்கிறானா? "என்று கேட்டார்கள்.நபி (ஸல்)அவர்கள், "ஆம் அபுத்தஹ்தாவே" என்று கூறினார்கள். உடனே அவர், "அல்லாஹ்வின் தூதரே! உங்கள் கரத்தை என்னிடம் காட்டுங்கள்" என்று கூறினார்.

நபி (ஸல்) அவர்கள் தமது கரத்தை அவரிடம் நீட்டியதும் அபுத்தஹ்தாஹ் அவர்கள், "எனக்குச் சொந்தமான தோட்டத்தை அல்லாஹ்விற்கு கடனாக வழங்கி விட்டேன்" என்று நபியவர்களின் கரத்தின் மீது தனது கரத்தை வைத்துக் கூறினார்கள்.
அந்தத் தோட்டத்தில் அறுநூறு பேரீச்ச மரங்கள் இருந்தன. மேலும் அங்கு தான் அவருடைய மனைவி உம்மு தஹ்தா(ரலி)அவர்களும் அவர்களுடைய குழந்தைகளும் இருந்தார்கள்.

பிறகு தனது மனைவியிடம் வந்து,''உம்மு தஹ்தாவே! என்று அழைக்க,அவர் உங்கள் அழைப்பிற்கு நான் அடிபணிகிறேன்"" என்று பதிலளித்தார்.
அப்போது அபுத்தஹ்தாஹ் (ரலி) அவர்கள்''நீ (இங்கிருந்து) வெளியேறிவிடு! இந்த இடத்தை நான் என் இறைவனுக்கு கடானாக வழங்கி விட்டேன்""என்று கூறினார்கள்.
த∴ப்சீர் தப்ரீ - அறிவிப்பாளர்:அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத்(ரலி)

### 3:92 ஆம் வசனம் இறக்கியருளப்பட்டபோது...

அன்ஸார்களில் அபூ தல்ஹா(ரலி) அதிக வசதி படைத்தவராக இருந்தார். அவருக்குப்பேரிச்ச மரங்கள் அதிகம் இருந்தன. அவரின் செல்வங்களில் பைருஹா என்ற தோட்டமே அவருக்கு மிகவும் விருப்பமானதாக இருந்தது. அது மஸ்ஜிது(ன்னபவி)க்கு எதிரில் இருந்தது. நபி (ஸல்) அவர்கள் அத்தோட்டத்திற்குள் சென்று அங்குள்ள நல்ல தண்ணீரைக் குடிப்பது வழக்கம். “நீங்கள் நேசிக்கும் பொருட்களிலிருந்து தானம் செய்யாத வரை நீங்கள் நன்மையை அடையவே மாட்டீர்கள்” என்ற (திருக்குர்ஆன் 03:92) இறைவசனம் அருளப்பட்டதும். அபூ தல்ஹா(ரலி), நபி (ஸல்) அவர்களிடம் வந்து, 'இறைத்தூதர் அவர்களே! அல்லாஹு தஆலா, 'நீங்கள் நேசிக்கும் பொருட்களிலிருந்து தர்மம் செய்யாதவரை நீங்கள் நன்மையைப் பெறவே மாட்டீர்கள்' எனக் கூறுகிறான். என் செல்வங்களில் நான் மிகவும் நேசிக்கும் பொருள் பைருஹா என்னும் தோட்டமேயாகும்.அது அல்லாஹ்விற்காக தர்மம் ஆகட்டும்! நான் அதன் மூலம் அல்லாஹ்விடம் நன்மையையும் அது (அவனிடம் என்னுடைய மறுமை வாழ்வின் நலனுக்கான)சேமிப்பாக இருக்க வேண்டுமென்றும் விரும்புகிறேன். எனவே 'இறைத்தூதர் அவர்களே! அதை அல்லாஹ் உங்களுக்குக் காட்டிய வழியில் பயன்படுத்திக் கொள்ளுங்கள்' எனக் கூறினார். நபி (ஸல்) அவர்கள் 'ஆஹா! இது அதிக லாபம் தரக்கூடிய செல்வமாயிற்றே! இது அதிக லாபம் தரக்கூடிய செல்வமாயிற்றே! நீர் கூறியதை நான் நன்றாகவே செவியேற்று விட்டேன். நீர் அதை உம்முடைய நெருங்கிய உறவினர்களுக்குப் பங்கிட்டு விடுவதை நான் பொறுத்தமாகக் கருதுகிறேன்' எனக் கூறினார்கள். அதற்கு அபூதல்ஹா (ரலி) 'இறைத்தூதர் அவர்களே! நான் அவ்வாறே செய்கிறேன்!' எனக் கூறிவிட்டு, அத் தோட்டத்தைத் தம் நெருங்கிய உறவினருக்கும் தம் தந்தையுடன் பிறந்தவரின் குழந்தைகளும் பங்கிட்டுவிட்டார்.

அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் (ரலி) புகாரி : 1461, 2318, 2757, 2769, 4554, 5611 முஸ்லிம்:2362.முஸ்னத் அஹ்மத் :12461.முஅத்தா மாலிக்:1807 நஸாஈ, இப்னு ஹிப்பான், பைஹகீ, இந்த நபிமொழி இன்னும் பல்வேறு நபிமொழித் தொகுப்புகளில் இடம் பெற்றிருக்கிறது.

### நபியவர்களின் மரணத்தின் போது...

நபி (ஸல்) அவர்கள் நபித்தோழர்களை இறையச்சத்தின் தங்கங்களாக, சகோதர பாசத்திற்கு எடுத்துக் காட்டுகளாக, நட்பிற்கு இலக்கணங்களாக, பிறருக்கு உதவும் பண்பாளர்களாக, சகிப்புத்தன்மையின் சான்றுகளாக, நற்குணங்களின் சிகரங்களாக,

நாகரிகத்தின் சொந்தங்களாக, மாற்றிவிட்டு இறையடி சேர்ந்த அந்த சமயத்தில் அவர்களில் ஒரு கூட்டம் நபியவர்கள் மரணிக்க வில்லை யாரேனும் நபியவர்கள் மரணித்து விட்டார்கள் என்று சொன்னால் அவர்களின் தலை அவர்களின் உடம்பில் இருக்காது என்று வாள் தூக்கி நிற்க மற்றொரு கூட்டமோ இல்லை நபியவர்கள் மரணித்து விட்டார்கள் என்று மறுப்பு தெரிவிக்க பிரச்சனை பூதாகரமாக வெடித்த அந்த சமயத்தில் அவர்களை ஒன்றினைத்து மனம் மாறச் செய்தது இறை வசனங்களே.அந்த இறைவசனங்களைக் கேட்ட மறு வினாடி தங்களின் பிடிவாதத்தைக் கைவிட்டு இறைவசனங்களுக்கு கட்டுப்பட்டார்கள்.

(என் தந்தை) அபூ பக்ர் (ரலி) (பனு ஹர்ஸ் குலத்தாரின் இல்லங்கள் அமைந்துள்ள) 'ஸுன்ஹ்' என்னுமிடத்தில் இருந்து கொண்டிருந்தபோது இறைத்தூதர்(ஸல்) அவர்கள் இறப்பெய்தினார்கள். - அறிவிப்பாளர் இஸ்மாயீல் (ரஹ்), 'அதாவது ஆலியாவில்'' என்று கூறினார்.அப்போது உமர் (ரலி) எழுந்து, 'அல்லாஹ்வின் மீதாணையாக! இறைத்தூதர்(ஸல்) அவர்கள் இறக்கவில்லை. என் உள்ளத்தில் அப்படித்தான் - நபி (ஸல்) அவர்கள் இறக்கவில்லை என்றே - தோன்றுகிறது. அவர்களை அல்லாஹ் (இப்போதே) நிச்சயம் எழுந்திருக்கச் செய்வான். அப்போது அவர்கள் (நபி - ஸல்- அவர்கள் இறந்துவிட்டார்கள் என்று கூறிய) பலரின் கைகளையும் கால்களையும் துண்டிப்பார்கள்'' என்று கூறினார்கள். அபூ பக்ர் (ரலி) (அங்கே) வந்து அல்லாஹ்வின் தூதரைப் போர்த்தியிருந்த போர்வையை விலக்கி அவர்களை (நெற்றியில்) முத்தமிட்டு, 'தங்களுக்கு என் தந்தையும் என் தாயும் அர்ப்பணமாகட்டும்! நீங்கள் உயிராயிருந்த போதும் நறுமணம் கமழ்ந்தீர்கள். இறந்த நிலையிலும் மணம் கமழ்கிறீர்கள். என் உயிரைத் தன் கையில் வைத்திருப்பவன் மீதும் ஆணையாக! அல்லாஹ் ஒருபோதும் இரண்டு மரணங்களை உங்களை சுவைக்கச் செய்யமாட்டார்கள்'' என்று சொல்லிவிட்டு வெளியேறினார்கள். (வெளியே வந்தபின் உமர் அவர்களை நோக்கி,) '(நபி - ஸல் - அவர்கள் இறக்கவில்லையென்று) சத்தியம்

செய்பவரே! நிதானமாயிருங்கள்'' என்று கூறினார்கள். அபூ பக்ர்(ரலி) பேசியபோது உமர் (ரலி) அமர்ந்தார்கள். அப்போது, அபூபக்ர் (ரலி) அல்லாஹ்வைப் புகழ்ந்து அவனைப் போன்றிவிட்டு,'(முஹம்மத்(ஸல்) அவர்களை வணங்கிக் கொண்டிருந்தவர், முஹம்மத்(ஸல்) அவர்கள் இறந்துவிட்டார்கள் என்பதை அறிந்து கொள்ளட்டும். அல்லாஹ்வை வணங்கிக் கொண்டிருந்தவர்' அல்லாஹ் (என்றும்) உயிர் வாழ்பவன் அவன் இறக்கமாட்டான் என்பதைப் புரிந்து கொள்ளட்டும்'' என்று கூறினார்கள். மேலும்,

'நபியே! நீங்களும் இறப்பவர் தாம் அவர்களும் இறப்பவர்களே' என்னும் (திருக்குர்ஆன் 39:30-ம்) இறை வசனத்தையும், 'முஹம்மது ஓர் இறைத் தூதரேயன்றி வேறில்லை. அவருக்கு முன்னரும் கூட பல இறைத்தூதர்கள் (வந்து) சென்றிருக்கிறார்கள். எனவே, அவர் இறந்துவிட்டாலோ, (போரில்) கொல்லப்பட்டுவிட்டாலோ நீங்கள் உங்கள் கால் சுவடுகளின் வழியே (பழைய மதத்திற்கே) திரும்பிச் சென்று விடுவீர்களா? (நினைவிருக்கட்டும்:) எவன் அவ்வாறு திரும்பிச் செல்கிறானோ அவனால் அல்லாஹ்விற்கு எத்தகைய தீங்கும் செய்துவிட முடியாது. நன்றி செலுத்தி வாழ்பவர்களுக்கு அல்லாஹ் அதற்குரிய பிரதி பலனை மிக விரைவில் வழங்குவான்' என்னும் (திருக்குர்ஆன் 03:144-ம்) இறை வசனத்தையும் ஓதினார்கள். உடனே மக்கள் (துக்கத்தால் தொண்டையடைக்க) விம்மியழுதார்கள்.

இதை நபி (ஸல்) அவர்களின் துணைவியாரான ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள்.

புகாரி: 3667, 3668

உமர் (ரலி) அவர்கள் இந்த வசனத்தை அப்போது தான் கேட்பவரைப் போன்று இருந்தர்கள்.

அபூபக்கர் (ரலி) அவர்கள் இந்த வசனத்தை ஓதிக் காட்டும் வரை இந்த வசனம் குர்ஆனில் இறக்கப்பட்டதை மக்கள் அறியாதவர்களைப் போன்று இருந்தார்கள்.

## மது சம்பந்தமான வசனம் அருளப்பட்டபோது

மது என்பது அனைத்து தீமைகளுக்கும் ஆணிவேராக இருக்கிறது.இன்று நடக்கிற கொலை,கொள்ளை,ஈன்றெடுத்த மகள் யார்?கட்டிய தாரம் எது என்று கூட தெரியாமல் கற்பழிக்கிற நிகழ்வுகள், ஈவ்டீசிங் இன்னும் இது போன்ற சமூகக் கொடுமைகளில் பலவற்றுக்கு மதுவே அடிப்படைக் காரணியாக இருக்கிறது.அப்படிப்பட்ட மதுவில் (அது தடை செய்யப்படுவதற்கு முன்னால்) ஊறித் திளைத்தவர்கள் நபித்தோழர்கள்.

"ஈமான் கொண்டோரே! மதுபானமும் சூதாட்டமும் கற்சிலைகளை வழிபடுதலும் அம்புகள் எறிந்து குறி கேட்பதும் ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயல்களிலுள்ளவையாகும், ஆகவே நீங்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் - அதனால் நீங்கள் வெற்றி யடைவீர்கள் (5:90)

என்று வலியுறுத்தும் வசனம் அவர்களை எவ்வாறு புடம்போட்ட தங்கங்களாக மாற்றியது என்பதைப் பின் வரும் நிகழ்வு மதுவில் ஊறித் திளைக்கிறவர்களுக்கு நல்லதொரு பாடத்தை தருகிறது.

நான் (அனஸ்) அபூ உபைதா இப்னுல் ஜர்ராஹ் (ரலி), அபூ துஜானா(ரலி)முஆத் இப்னுல் ஜபல்(ரலி)சுஹைல் இப்னுல் பைளாவு (ரலி) உபை இப்னுல் கஅப்(ரலி)ஆகியோருக்கு (மது)க் கோப்பையைப் பரிமாறிக் கொண்டிருந்தேன்.பேரிச்சம் பழம் மற்றும் பேரீச்சச் செங்காய் ஊறலில் தயாரான மதுவை அவர்கள் அருந்தியதால் அவர்களின் தலைகள் (கீழே) சாய்ந்தன.

அப்போது பொது அறிவிப்பாளர் ஒருவர் அறிந்து கொள்ளுங்கள் மது தடை செய்யப் பட்டுவிட்டது என்று அறிவித்ததை நான் செவியுற்றேன்.உடனே எங்களிடம் யாரும் வருவதற்கும் எங்களில் யாரும் வெளியே செல்வதற்கும் முன்பாக அந்த மதுவை நாங்கள் கீழே கொட்டிவிட்டோம்.மதுப் பீப்பாய்களை உடைத்தெறிந்தோம்...

அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) நூல்: தஃப்ஸீர் தப்ரீ.

உமர் (ரலி) அவர்கள் மது சம்பந்தமாக தீர்க்கமான ஒரு முடிவை இறைவன் வழங்க வேண்டும் என்று ஆவல்கொண்டிருந்தார்கள்.முதல் கட்டமாக 2:219 ஆவது வசனமும் 2ஆம் கட்டமாக 4:43 ஆவது வசனமும் மூன்றாம் கட்டமாக 5:90 ஆவது வசனமும் அதைத் தொடர்ந்து 91 ஆவது வசனத்தில் நீங்கள் விலகிக் கொள்ளமாட்டீர்களா?என்ற வசனமும் இறக்கப்பட்ட போது உமர் (ரலி)அவர்கள் நாங்கள் விலகி விட்டோம்,விலகி விட்டோம் என்று கூறலானார்கள்.

நூற்கள்:நஸயீ, திர்மிதீ, அபூதாவூத்

## மதீனா நகரின் தெருக்களில் ஓடிய மது

நான் அபூ தல்ஹா (ரலி) வீட்டில் மக்களுக்கு மது பரிமாறுபவனாக இருந்தேன். அந்த நாள்களில் பேரிச்சம் பழ மதுவை (பேரிச்ச மரக்கள்ளை)யே அவர்கள் குடித்து வந்தனர்.(மதுவைத் தடை செய்யும் இறைவசனம் அருளப்பட்டவுடன்), இறைத்தூதர்(ஸல்)அவர்கள் பொது அறிவிப்புச் செய்பவரை அழைத்து, "(மக்களே!) மது தடை செய்யப்பட்டுவிட்டது" என்று அறிவிக்கும்படி கட்டளையிட்டார்கள். அபூ தல்ஹா(ரலி)என்னிடம், "வெளியே சென்று இதை ஊற்றிவிடு" என்று கூறினார்கள். நான் வெளியே சென்று அதை (சாலையில்) ஊற்றி விட்டேன்.மதீனா நகரின் தெருக்களில் அது ஓடியது... புகாரி: 2464. அறிவிப்பாளர்: அனஸ் (ரலி).

நான் அபூ உபைதா இப்னுல் ஜர்ராஹ் (ரலி), சுஹைல் இப்னுல் பைளாவு (ரலி) உபை இப்னுல் கஅப் (ரலி) ஆகியோருக்கும் மற்றும் சில நபித்தோழர்களுக்கும் அபூதல்ஹா

(ரலி) அவர்களிடத்தில் வைத்து மது ஊற்றிக் கொடுத்துக் கொண்டிருந்தேன்.இறுதியில் போதை அவர்களுக்கு தலைக்கேறியது.
அப்போது முஸ்லிம்களில் ஒருவர் வந்து மது தடை செய்யப்பட்டுவிட்டது என்ற செய்தி உங்களுக்குத் தெரியாதா? என்று கேட்டார். அதற்கவர்கள் சற்று யோசிப்போம், விசாரிப்போம் என்றனர்.பின்னர், அனஸ் உமது பாத்திரத்தில் எஞ்சியருப்பதை கொட்டிவிடு என்று கூறினார்கள்.
அல்லாஹ்வின் மீது சத்தியமாக அவர்கள் மறுபடியும் மதுவின் அருகில் செல்லவே இல்லை...
அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) நூல்:முஸனத் அஹ்மத்

திருமறைக் குர்ஆனின் ஒவ்வொரு வசனமும் நபித்தோழர்களை எவ்வாறு மாற்றியது அவர்களை எவ்வாறு புடம் போட்ட தங்கங்களாக மாற்றியது என்பதையும்; அவ்விறைவசனங்களுக்கு எவ்வாறு செவிசாய்த்துக் கட்டுப்பட்டார்கள் என்பதையும் பார்த்துக் கொண்டிருக்கிறோம்

## 3:103 ஆம் வசனம் அருளப்பட்டபோது

இன்னும் நீங்கள் எல்லோரும் அல்லாஹ்வின் கயிற்றை வலுவாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள், நீங்கள் பிரிந்தும் விடாதீர்கள், அல்லாஹ் உங்களுக்குக் கொடுத்த நிஃமத்களை (அருள் கொடைகளை) நினைத்துப் பாருங்கள், நீங்கள் பகைவர்களாய் இருந்தீர்கள் -உங்கள் இதயங்களை அன்பினால் பிணைத்து, அவனது அருளால் நீங்கள் சகோதர்ர்களாய் ஆகிவிட்டீர் கள், இன்னும் நீங்கள் (நரக) நெருப்புக் குழியின் கரை மீதிருந்தீர்கள், அதனின்றும் அவன் உங்களைக் காப்பாற்றினான் - நீங்கள் நேர்வழி பெறும் பொருட்டு அல்லாஹ் இவ்வாறு தன் ஆயத்களை -வசனங்களை உங்களுக்குத் தெளிவாக்குகின்றான். 3:103

மேற்கூறப்பட்ட வசனம் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கூட்டத்தார் (அன்சாரிகள்) சம்பந்தமாக அருளப்பெற்றதாகும்.

யூதர்களில் ஒருவர் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கூட்டத்தார் அடங்கிய ஒரு குழுவினரைக் கடந்து சென்றார்.அறியாமைக் காலத்தில் அவர்களிடையே ஏராளமான போர்கள் நடைபெற்றன. அவர்களுக்குள் கடுமையான விரோதமும்,வன்மங்களும், காழ்ப்புணர்ச்சிகளும் இருந்து வந்தன. அதனால் அவர்களிடையே நீண்ட

நெடுங்காலமாக மோதல்களும் பிரச்னைகளும் இருந்து வந்தன. பகைவர்களாக இருந்த அவர்கள் தற்போது அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு சகோதரர்களாக நட்புடனும் ஒற்றுமையுடனும் இருப்பது அவருக்கு பிடிக்கவில்லை.

ஆதனால் தம்மோடு இருந்த ஒரு குழுவை அனுப்பி அந்தக் குழுவினரோடு அமர்நது கொண்டு புஆஸ் போரின் போது அவர்களிடையே நடந்த மோதல்களையும் இதர சண்டைகளையும் அவர்களுக்கு நினைவுபடுத்துமாறு உத்தரவிட்டார்.அந்த மனிதரும் அவர்களுக்கிடையே புஆஸ் போரை நினைவுபடுத்திக் கொண்டே இருந்தார்.

கடைசியாக அவர்களின் உள்;ளங்களில் அறியாமைக்காலத்து உக்கிரம் மேலோங்கியது.அதனால் ஒருவர் மற்றொருவர் மீது கோபம் கொண்டு கிளர்ந்தெழுந்து சண்டையிட்டுக் கொண்டனர்.தத்தமது தனித்தன்மைகளைப் பறைசாற்றிக் கொண்டனர். ஆயுதங்களைத் தேடி அவற்றை ஏந்திய வண்ணம் போராடுவதற்கு சபதமேற்றனர்.

இது நபியவர்களுக்கு தெரியவர உடனே அவர்களிடம் சென்று அவர்களை அமைதிப்படுத்தினார்கள்.பின்பு நான் உங்களுக்கு மத்தியில் இருந்து கொண்டிருக்கும் போதே உங்களுக்குள் அறியாமைக் காலத்து வாக்குவாதமா? என்று கேட்டுவிட்டு மேற்கூறப்பட்ட வசனத்தை ஓதிக்காட்டினார்கள்.

வசனத்தை கேட்டதுதான் தாமதம் உடனே தாங்கள் செய்த காரியத்தை எண்ணி வருந்திய அவ்விரு கூட்டத்தாரும் சமாதானத்திற்கு வந்து ஆயுதங்களைப் போட்டுவிட்டு ஒருவரையொருவர் கட்டித் தழுவிக் கொண்டனர்.

நூல்: த.ஃப்ஸீர் இப்னு கஸீர்.

பாருங்கள் அன்பார்ந்தவர்களே தங்களுக்குள் சண்டையிடுகிற நிலை வந்த போது கூட இறைவசனம் என்றவுடன் தங்களின் பழைய நிலையை ஒதுக்கி வைத்துவிட்டு எவ்வாறு இறைவசனத்திற்கு கட்டுப்பட்டார்கள் என்பது இந்த சம்பவத்திலிருந்து நம்மால் விளங்கிக் கொள்ளமுடிகிறது.

## 7:199 ஆம் வசனத்திற்கு நபித்தோழர்கள் கட்டுப்பட்ட நிகழ்வு

'உயைனா இப்னு ஹிஸ்ன் இப்னி ஹுதை.ஃபா' (ரலி) (மதீனாவுக்கு) வந்து, தம் சகோதரருடைய புதல்வர் ஹுர்ரு இப்னு கைஸ் (ரலி) அவர்களிடம் தங்கினார். உமர் (ரலி)தம் அருகில் அமர்த்திக்கொள்பவர்களில் ஒருவராக (அந்த அளவுக்கு அவர்களுக்கு நெருக்கமானவராக) ஹுர்ரு இப்னு கைஸ் இருந்தார். முதியவர்களோ இளைஞர்களோ

யாராயினும், குர்ஆனை நன்கறிந்தவர்களே உமர் (ரலி) அவர்களின் அவையினராகவும் ஆலோசகர்களாகவும் இருந்தனர். எனவே, உயைனா, தம் சகோதரருடைய புதல்வரிடம், "என் சகோதரர் மகனே! உனக்கு இந்தத் தலைவரிடம் செல்வாக்கு உள்ளது. எனவே, அவரைச் சந்திக்க எனக்கு அனுமதி பெற்றுத் தா" என்று கூறினார். அதற்கு அவர், "உமர் (ரலி) அவர்களிடம் செல்ல நான் உமக்காக அனுமதி கேட்கிறேன்" என்று கூறினார். அவ்வாறே உமரைச் சந்திக்க உயைனாவுக்காக ஹுர்ரு அவர்கள் அனுமதி கேட்டார். உமர் (ரலி) அவர்களும் அவருக்கு (தம்மைச் சந்திக்க) அனுமதி கொடுத்தார்களஉயைனா அவர்கள் உமர் (ரலி) அவர்களிடம் சென்றபோது, 'கத்தாபின் புதல்வரே!அல்லாஹ்வின் மீதாணையாக! நீங்கள் எங்களுக்கு அதிகமாக வழங்குவதில்லை.எங்களிடையே நீங்கள் நீதியுடன் தீர்ப்பளிப்பதில்லை'' என்று கூறினார். உமர் (ரலி)கோபமுற்று அவரை நாடி (அடிக்க)ச் சென்றார்கள். உடனே ஹுர்ரு அவர்கள் உமர் (ரலி)அவர்களை நோக்கி, 'இறை நம்பிக்கையாளர்களின் தலைவரே! உயர்ந்தோனான அல்லாஹ் தன் தூதர்(ஸல்) அவர்களுக்கு, '(நபியே!) மன்னிக்கும் போக்கை மேற்கொள்வீராக! மேலும், நன்மை புரியுமாறு ஏவுவீராக! இன்னும் அறிவீனர்களைவிட்டு விலகியிருப்பீராக!'' (திருக்குர்ஆன் 07:199) என்று கூறியுள்ளான். இவர் அறியாதவர்களில் ஒருவர்'' என்று கூறினார். அல்லாஹ்வின் மீதாணையாக! ஹுர்ரு அவர்கள் இந்த வசனத்தை உமர் (ரலி) அவர்களுக்கு ஓதிக் காட்டியபோது உமர் (ரலி) அதை மீறவில்லை. (பொதுவாக) உமர் (ரலி) இறைவேதத்திற்கு மிகவும் கட்டுப்படக்கூடியவர்களாய் இருந்தார்கள்.

அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ்(ரலி) புகாரி: 4642.

## 24:22 ஆம் வசனம் இறக்கியருளப்பட்டபோது...

ஒரு போருக்கு போய்விட்டு நபியவர்கள் திரும்பி வரும் போது அன்னை ஆயிஷா (ரலி) விடுபட்டு விட்டார்கள். அவரை ஸஃப்வான் இப்னு முஅத்தல் (ரலி) என்கிற நபித்தோழர் தான் மதீனாவிற்கு அழைத்து வருகிறார்.அதற்குள் நயவஞ்சகர்கள் அன்னை ஆயிஷா (ரலி) அவர்களுக்கும், ஸஃப்வான் இப்னு முஅத்தல் (ரலி) அவர்களுக்கும் தவறான தொடர்பு இருப்பதாக (அல்லாஹ் அத்தகைய அவதூறு கூறுவதிலிருந்து நம்மைக் காப்பானாக!) வதந்தீயைப் பரப்பிவிட்டார்கள். அந்த வதந்தியை நபித்தோழர்களில் சிலரும் நம்பி பரப்ப ஆரம்பித்து விட்டார்கள். அவர்களில் ஒருவர் தான் பத்ருப் போரில் கலந்து கொண்டவரான மிஸ்தஹ் (ரலி) என்ற நபித் தோழர் ஆவார். இவர் அபூபக்கர் (ரலி) அவர்களின் சிறிய தந்தையின் மகளின் மகன் ஆவார். இவருக்கும் இவருடைய குடும்பத்தாருக்கும் அபூபக்கர் (ரலி) அவர்கள் தான் பொருளாதார உதவிகளை வழங்கி வருகிறார்.இந்த நிலையில் தான் தான் யாரிடத்தில் பொருளாதார உதவியைப்

பெறுகிறாரோ அந்த தன்னுடைய மாமாவின் மகளின் கற்பில் களங்கம் சுமத்துகிற ஒரு நிலைக்கு தள்ளப்படுகிறார்.
இந்த நிலையைக் கண்ட அபூபக்கர்(ரலி)அவர்கள் தன்னுடைய உதவியைப் பெற்று வாழக்கூடிய ஒருவர் தன்னுடைய மகளுடைய கற்பில் களங்கம் சுமத்துகிறாரே என்று வருத்தப்பட்டு அல்லாஹ்வின் மீது சத்தியமாக இனிமேல் மிஸ்தஹிற்கு பொருதார உதவிகளை வழங்கமாட்டேன் என்று கூறிவிட்டார்.
பாருங்கள் அன்பார்ந்தவர்களே!இறை வசனம் அவருக்கு எத்தயை தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதையும் அவ்விறை வசனத்திற்கு எவ்வாறு கட்டுப்பட்டார் என்பதையும்.

...அபூ பக்ர்(ரலி), 'அல்லாஹ்வின் மீதாணையாக! (என் மகள்) ஆயிஷாவைப் பற்றி (அவதூறு) கூறிய பின்பு ஒருபோதும் மிஸ்தஹுக்காக செலவிட மாட்டேன்'' என்று கூறினார்கள். மிஸ்தஹ் இப்னு உஸாஸா தம் உறவினர் என்பதால் அவருக்காக அபூ பக்ர் (ரலி) செலவிட்டு வந்தார்கள்... உடனே அல்லாஹ், 'உங்களில் (பொருள்) அருளப் பெற்றோரும் (பிறருக்கு உதவும்) தாராள மனம் கொண்ட இயல்புடையோரும், (தங்கள்) உறவினர்களுக்கோ, ஏழைகளுக்கோ, இறைவழியில் ஹிஜ்ரத் செய்தவர்களுக்கோ (எதுவும்) கொடுக்க மாட்டேன் என்று சத்தியம் செய்ய வேண்டாம். (அவர்களால் தங்களுக்கு ஏதும் வருத்தம் ஏற்பட்டிருந்தால்) அதனை மன்னித்துப் (பிழைகளைப்) பொருட்படுத்தாமல் விட்டுவிடட்டும். அல்லாஹ் உங்களுக்கு மன்னிப்பளிப்பதை நீங்கள் விரும்பமாட்டீர்களா? அல்லாஹ் மிகவும் மன்னிப்போனும் கிருபையுடையோனுமாய் இருக்கிறான்'' என்னும் (திருக்குர்ஆன் 24:22) இறைவசனத்தை அருளினான். அதன் பிறகு அபூ பக்ர்(ரலி), 'ஆம், அல்லாஹ்வின் மீதாணையாக! அல்லாஹ் எனக்கு மன்னிப்பளிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்'' என்று கூறிவிட்டு, மிஸ்தஹ்(ரலி) அவர்களுக்கு ஏற்கனவே தாம் செய்து வந்த (பொருள்)உதவியைத் தொடரலானார்கள். "அல்லாஹ்வின் மீதாணையாக! அவருக்கு(ச் செய்யும் இந்த உதவியை) ஒருபோதும் நான் நிறுத்தமாட்டேன்'" என்றும் கூறினார்கள்.

புகாரீ: 2661, 4141, 4750, 4757, 6679. முஸ்லிம்: 719. திர்மிதீ: 3180. முஸனத் அஹ்மத்: 24362, 25664.

## 49:2 ஆம் வசனம் இறக்கியருளப்பட்டபோது...

(ஒருமுறை) நல்லவர்களான அபூ பக்ர் (ரலி) அவர்களும் உமர் (ரலி) அவர்களும் அழிவில் சிக்கிக்கொள்ள இருந்தார்கள். பனு தமீம் குலத்தைச் சேர்ந்த பயணக்

குழுவினர் நபி (ஸல்) அவர்களிடம் (தங்களுக்கு ஒரு தலைவரை நியமிக்கும்படி கோரியவர்களாக) வந்தபோது நபி (ஸல்) அவர்களுக்கு அருகில் அவர்கள் இருவரும் குரலை உயர்த்திப் பேசினார்கள். அந்த இருவரில் ஒருவர் (உமர்), பனு முஜாஃஉ குலத்தவரான அக்ரஃ இப்னு ஹாபிஸ் அவர்களை நோக்கி (அவரைத் தலைவராக நியமிக்கும்படி) சைகை செய்தார். மற்றொருவர் (அபூ பக்ர்), இன்னொருவரை (கஅகாஉ இப்னு மஅபத்)நோக்கி, (அவரைத் தலைவராக நியமிக்கும்படி) சைகை செய்தார்.'அந்த இனனொருவருடைய பெயர் எனக்குத் தெரியாது'' என்று அறிவிப்பாளர்களில் ஒருவரான நாஃபிஉ (ரஹ்) கூறினார்: அப்போது அபூ பக்ர்(ரலி) உமர் (ரலி) அவர்களிடம்,'எனக்க மாறு செய்யவே நீங்கள் விரும்புகிறீர்கள்'' என்று கூறினார்கள். உமர் (ரலி),'தங்களுக்கு மாறு செய்வது என் விருப்பமன்று'' என்று கூறினார்கள். இந்த விவகாரத்தில் அவர்கள் இருவரின் குரல்களும் உயர்ந்தன. அப்போது, 'இறைநம்பிக்கையாளர்களே! உங்கள் குரலை நபியின் குரலுக்கு மேல் உயர்த்தாதீர்கள்!'' எனும் (திருக்குர்ஆன் 49:2 வது) வசனத்தை அல்லாஹ் அருளினான்.

புகாரி: 4845. இப்னு அபீ முலைக்கா (ரஹ்) அறிவித்தார்

இப்னு ஸுபைர் (ரலி) கூறினார்:
இந்த வசனம் அருளப்பெற்ற பின் உமர் (ரலி) நபி (ஸல்) அவர்களிடம் இந்த அளவுக்கு மெதுவாகப் பேசுவார்கள் (அவர் என்ன கூறினார் என்பதை) நபி (ஸல்) அவர்கள் அவரிடம் (திரும்ப) விசாரித்தே தெரிந்துகொள்வார்கள்.

திருக்குர்ஆன் 49:2 வது வசனம் அருளப்பெற்ற நாளிலிருந்து) நபி (ஸல்) அவர்கள் ஸாபித் இப்னு கைஸ் (ரலி) அவர்களைக் காணவில்லை என்று தேடினார்கள். அப்போது ஒருவர் “அவரைக் குறித்த செய்தியை தங்களுக்காக நான் அறிந்து வருகிறேன், இறைத்தூதர் அவர்களே!” என்று கூறினார். அவரிடம் அந்த மனிதர் சென்றார். அப்போது அவர் தம் தலையைக் கவிழ்த்தபடி (கவலையோடு) தம் வீட்டில் அமர்ந்துகொண்டிருக்கக் கண்டார். அந்த மனிதர் ஸாபித் இப்னு கைஸ் (ரலி) அவர்களிடம், 'உங்களுக்கு என்ன ஆயிற்று?' என்று கேட்டதற்கு ஸாபித்(ரலி), “(என்னுடைய நிலை) மோசம் தான். நான் நபி (ஸல்) அவர்களின் குரலுக்கு மேல் என்னுடைய குரலை உயர்த்தி(ப் பேசி) வந்தேன். நான் நரகவாசிகளில் ஒருவன்தான்” என்று கூறினார். (செய்தியறிந்த) அந்த மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, “ஸாபித் இப்னு கைஸ் இப்படி இப்படிக் கூறினார்” என்று தெரிவித்தார்.

அறிவிப்பாளர்களில் ஒருவரான மூஸா இப்னு அனஸ் (ரஹ்) கூறினார்:அந்த மனிதர் ஸாபித் இப்னு கைஸ்(ரலி) அவர்களிடம், (இறைத்தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து,) மகத்தான நற்செய்தியை வாங்கிக்கொண்டு மீண்டும் ஒருமுறை சென்றார். அப்போது நபி (ஸல்) அவர்கள் 'ஸாபித் இப்னு கைஸ் அவர்களிடம் சென்று 'நிச்சயம் நீர் நரகவாசிகளில் ஒருவரல்லர். சொர்க்கவாசிகளில் ஒருவரே' என்று சொல்!''என்று கூறினார்கள். அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் (ரலி) புகாரி: 4846.

## 33:28, 29 ஆம் வசனங்கள் அருளப்பட்டபோது

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் துணைவியருக்கு (அவர்கள் விரும்பினால் தம்முடன் சேர்ந்து வாழலாம் அல்லது பிரிந்துவிடலாம் என) உரிமையளித்திடுமாறு அல்லாஹ்வின் தூதருக்குக் கட்டளையிட்டப்பட்டபோது, அவர்கள் என்னிடம்தான் முதன்முதலாக விஷயத்தைக் கூறினார்கள்: "(ஆயிஷா!) நான் உனக்கு ஒரு விஷயத்தைச் சொல்கிறேன். (என்று அதைச் சொல்லிவிட்டு,) "நீ உன் பெற்றோரிடம் அனுமதி கேட்டுக்கொள்ளும் வரை அவசரப்படவேண்டாம்" என்று கூறினார்கள். என் பெற்றோர் நபி (ஸல்) அவர்களைப் பிரிந்துவிடும்படி உத்தரவிடப்போவதில்லை என்று அவர்களுக்குத் தெரிந்திருந்தது. பிறகு அவர்கள், 'நபியே! உங்கள் துணைவியரிடம் கூறுங்கள்: நீங்கள் இவ்வுலக வாழ்க்கையையும், அதன் அலங்காரத்தையும் (மட்டுமே) விரும்புவீர்களாயின், வாருங்கள்! உங்களின் வாழ்க்கைக்கு உரியதைக் கொடுத்து நல்லமுறையில் உங்களை விடுவித்து விடுகிறேன். ஆனால், நீங்கள் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் மறுஉலகையும் விரும்புவீர்களானால், நிச்சயமாக அல்லாஹ் உங்களிலுள்ள (இத்தகைய)நல்லவர்களுக்காக மகத்தான நற்பலனை தயார் செய்து வைத்துள்ளான்'' எனும்(திருக்குர்ஆன் 33:28, 29 வசனங்களை ஓதினார்கள். அப்போது நான், 'இது தொடர்பாக என் பெற்றோரிடம் நான் என்ன அனுமதி கேட்பது? நான் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் மறுமை வீட்டையுமே விரும்புகிறேன்'' என்று சொன்னேன். பிறகு நபி (ஸல்) அவர்களின் இதரத் துணைவியரும் என்னைப் போன்றே செயல்பட்டனர்.

நபி (ஸல்) அவர்களின் துணைவியாரான ஆயிஷா(ரலி) கூறினார். புகாரி:4786.

தொடரும் இன்ஷா அல்லாஹ்